694

# BAKTHA MAHIMAI

**Vol. I.**

694
3.20

BY

VARAKAVI THIRU
A. SUBRAMANIA BARATHY

A. SRIRAMULU CHETTY & Co.,
TRIPLICANE, MADRAS

[Price As. 4

O2:417
N20
172700

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

# பக்தமகிமை

வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி
எழுதியது.

A. ஸ்ரீராமலு செட்டியார் கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

1920.

காபிரைட்.]

[விலை. அணா 4

# முகவுரை.

---

பக்தமகிமை என்னும் இச்சிறு புத்தகத்தில், புண்டரீ கன், நாமதேவ், கோராகுயவர், என்னும் இம்மூன்று பக்தர் களுடைய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இவை மூன்றும், தெய்வ பக்தி, மாதுர் பக்தி, பிதுர் பக்தி முதலிய வைகளையும் உலகவாழ்விற்குரிய நல்ல ஒழுக்கங்களையும் விளக் கும் அரியசரித்ரங்களாதலின், இவற்றை, சிறுவர்கள் எளிதி லுணர்ந்து நல்வழிப் படுவதற்கேற்றபடி இனிய வசன நடை யில், சுருக்கமாக எழுதியுள்ளேன். ஆதலின் இப்புத்தகம் மாணவர்களுக்கு, உபபாடங்களாக உபயோகித்தற்குரிய தாகும் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

திரு. அ. பாரதி.

## Preface to the Second Edition.

To meet the increasing demand of the Secondary Schools and of the Tamil Reading public, I venture to bring out the second edition of the Adventures of Ulysses in Tamil. It was in 1913 that my uncle the late Mr. K. Venkatarama Aiyar thought of translating some of the works of the eminent English writers into Tamil with the result that the experiment proved a success. I owe a debt of gratitude to the Headmasters of various Secondary Schools including the Training School Board for the encouragement given by prescribing the book for non-detailed study in the Lower forms and classes and trust that the same may be extended to me also. Further, I have to convey my thanks to Mr. P. Sreenivasa Aiyar, the Tamil Pandit of the local Native High School who went through the proofs and corrected the necessary typographical errors and to the Publisher Mr. T. Krishnaswami Aiyar who promptly published the works.

12th August 1920. } G. BALASUBRAHMANYAM
*Cashier*,
The Union Bank, Ltd., Kumbakonam.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பக்த மகிமை

## புண்டரீகன் அல்லது பெற்றோர் பெருமை.

### 1.

உலகிலுள்ள கண்டங்கள் எல்லாவற்றிலும் மிகுதியும் சிறப்புடையது பரதகண்டம். பூமியின் பல பாகங்களிலு மிருந்து ஜனங்கள் இங்கு வந்தபடியா யிருக்கிறார்கள். தன தான்யங்களில் இதனைப்போலப் பேரும் சீரும் பெற்றது வேறெதுவுமில்லை. எப்படிப்பட்டவரும் இக் கண்டத்தில் பிழைக்க வழியுண்டு. பிரபலமான தேவாலயங்களும் இத னிடம் பலவுள. ஆண்பாலரும் பெண்பாலரும் கல்வி கேள்வி களில் வல்லவர்கள். அதனால் இத் தேசத்தில் ஈகை, இரக் கம், ஒற்றுமை, பொறுமை, அடக்கம், தெய்வபக்தி முதலிய நல்ல குணங்களும், அந்தக் குணங்களுக்குரிய நல்ல ஒழுக்கங்களும் எல்லாரிடத்திலும் குடிகொண்டிருக்கும். இப்படி ஏற்றம் பெற்றுள்ள இக் கண்டத்தின் வடபாரிசத் தில் லோகதண்டம் என்னும் நகரமொன்றுண்டு. இது பரதகண்டத்துக்குத் தலைமையான நகரமென்று சொல் லும்படி எல்லா வளங்களும் நிறையப் பெற்றிருந்தது சாது

மகாஜனங்கள் இப்பதியின்கண் சதாகாலமும் வசித்து வந்த தால் மழையும் கிரமந் தவறாமல் பெய்துகொண்டிருந்தது.

2. இந்த நகரத்தில் சந்து என்னும் பெயர்கொண்ட பாகவத ரொருவரிருந்தார். அவருக்கு மனைவியாக வாய்த்தவள் கற்பிற் சிறந்தவள்; கணவனையே குருவாகவும் தெய்வமாகவும் கொண்டவள்; வருமானத்திற் கேற்றபடி இல்லறத்தைப் புகழுடன் நடத்திவந்த இவ்வுத்தமியின் பெயர் சாத்யகி. இவர்களது வாழ்க்கைநலத்தைக் கொண்டாடாதவ ரொருவருமிலர். இல்லற முறைமையை இவர்களால் நன்கறிந்து கொண்டவர்கள் பலர்.

3. பூவும் மணமும்போலப் பொருந்தி வாழ்ந்து வரும் இவர்களுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. இவர்கள் வாழையடிவாழையாய்த் தங்கள் குலம் விருத்திபெற்று வரவேண்டுமென்று எண்ணினார்கள். அந்த எண்ணத்தை முற்றுவிக்கப் படாத பாடெல்லாம் பட்டார்கள்; விரதங்களை மேற்கொண்டார்கள்; பிரார்த்தனைகளும் செய்து கொண்டார்கள்; விசேஷமான தான தருமங்களை வேண்டியபடி புரிந்து வந்தார்கள்.

4. இவ்வாறிருக்கும்போது தெய்வாநுக்கிரகத்தால் சாத்யகி என்னும் தையல்நாயகி கர்ப்பவதியானாள். 'நல்ல பிள்ளையைப் பெற்று மகிழ்வீராக' என்றபெரியவர்கள் இவர்கள் விஷயத்தில் கூறிவந்த வாழ்த்து வீண் போகுமா? தூயகுணம் வாய்ந்தவர்க ளல்லவா? பத்துமாதஞ் சென்றதும் சாத்யகியம்மாள் ஒரு தநயனைப் பெற்றெடுத்தாள். புத்திரச் செல்வம் சித்தித்ததும் தாய்தந்தைய ரடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை அவர்கள் தங்களால் சாத்தியமான தான தருமங்களைத் தக்கவர்களுக்கும் ஏழைகளுக்கும் தளர்வின்றிச் செய்

தார்கள்; தங்கள் கலி தீர்ந்ததென்று மனச்சாந்தி யடைந்தார்கள்.

5. கடவுளருளால் கிடைத்த குழந்தைக்கு அவர்கள் எந்தெந்தக்காலத்தில் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை நெறிகடவாமல் நடத்தி வந்தார்கள்; புண்டரீகன் என்று பெயருமிட்டார்கள்; தக்க வயது வந்ததும், இகத்துக்கும் பரத்துக்கும் உதவியான கல்வியிலும் கேள்வியிலும் பழகவைத்தார்கள்; பிறகு விவாகச் சடங்கையும் விமரிசையாக முடித்தார்கள்.

6. புண்டரீகன் தனது மனைவியுடன் இல்லறத்தை நடத்தி வருங்காலத்தில் ஸத்திய நிலையினின்றும் தவறினான். தவறுவதற்குத் துணையா யிருந்தது அவனுடைய ஊழ்வினையே.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்"——என்கிறபடி

அது, தன் வசப்பட்டவ ரெத்தகைய அறிவாள ராயினும், அவர்களையும் ஆட்டிவைக்கக் கூடியதல்லவா? நீதி வழுவாத சக்ரவர்த்திகள் எத்தனைபேர் இதனால் நிலைகெட்டுத் தவிக்கலாயினர். ஆகையால், 'கடப்பாரெவரே கடுவினையை?' என்று புண்டரீகனும் அவ் வினைக்குட்பட்டு வருந்தி நின்றனன். இவ்வருத்தம் நாளுக்கு நாள் அதிகரிக்க, அவன் தன்னை அன்புட னீன்றெடுத்த அன்னையையும் அப்பனையும் மெத்தவும் துன்பப் படுத்தத் துணிந்தான்.

7. மகனும் மருமகளும் இப்படித் தங்களை வருத்தி வருவதைச் சகியாத தாய்தந்தையர் "நாம் எவ்வளவோ புத்தி போதித்தும், நமது குமாரன் அவற்றைச் சிறிதுங் கவனித்தானில்லை. துர்ப்பழக்க மேலிட்டு நம்மைவீணாகத் தொந்

தரை செய்ய முற்பட்டு விட்டான். மனைவியின் பேச்சே இவனுக்குப் பெரிதாயிருக்கிறது. அவளுக்கு இவன் குற்றேவல் செய்கிறான். இனி நாம் இவனிடம் இருப்பது சரியல்ல. கங்காயாத்திரிகளுடன் சேர்ந்து காசிக்குப் போய்விடுவதே உத்தமம். அங்கிருந்த வண்ணம் நமது சொற்ப ஆயுளையுங் கழித்து விடலாம். புண்ணிய க்ஷேத்திரங்கள் யாவற்றிலும் மேன்மை பெற்றது அதுவே யன்றோ? அந்தப்பதியில் உயிர் துறந்தவர் முத்தியுலகம் அடைந்தவர்களென்று அனந்த நூல்களும் ஆன்றோரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆதலால் நாம் இப்போதே அங்குப் புறப்பட்டுப் போகவேண்டும்'' என்று திட்டஞ் செய்துகொண்டனர்.

8. சந்து என்பவரும் அவர் தேவி சாத்யகியும் இவ்வண்ணம் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு தகுந்த துணை கிடைத்ததும் அத் துணையாளரோடு சேர்ந்து காசிமா நகரில் வாசஞ் செய்யப் புறப்பட்டார்கள். வழியில் அந்தக்ஷேத்திரத்தின் பிரபாவத்தைப் பேசிக்கொண்டே சென்றனர்.

ஆப்தர்களே! நாம் விரும்பிச் செல்லும் காசியம்பதி மோக்ஷத்தைத் தரக்கூடிய ஸ்தானங்களிலெல்லாம் முதன்மை வாய்ந்தது; கங்காநதி தீரத்தில் உள்ளது. இத் திருத் தலத்திலே சிவபெருமானவர் தம் தொண்டர்கள் கோருகிறபடி காட்சி யளித்து நன்மை செய்கிறார். சர்வ சங்கார காலத்திலும் அது அழிவடையாதது.

9. சம்வர்த்தனன், இபக்கர் முதலானவர் வழிபட்ட சிவலிங்கங்களும், கோ பூசித்த கோப்பியரேகம், கபிலாகாரம் முதலிய பல ஸ்தலங்களும் அதில் உண்டு. மற்றும் அம் மகா ஸ்தலத்தில், ஐந்து குரோசம் சிவலிங்கங்கள் இருத்தலால் அதற்கு ஆனந்தகானம் என்றும் பேருண்டு. இறந்த உயிரை ஈதலி

ஞலும் பிராமணனொருவன் எடுத்த பிடி மணலில் உற்ப வித்த சிவலிங்கம் இருபத்தினுலும் அதற்கு அவிமுக்தம் எனவும், சிவமூர்த்தி சோதிவடிவாய் எழுந்தருளி அடைந்த வர்க்கு அழியாத வாழ்வு பிராப்தமாகும்படி கிருபை புரித லால் காசி எனவும், உயிர்க்குத் தரும மளித்தலால் தருமவன மெனவும் அதற்குப்பெயருண்டு. இந்நகர் பெண்ணுருக் கொண்டு சிவபரஞ் சுடரைப் பணிந்து தன்னை வணங்கினவர் மோக்ஷமடைய வரம்பெற்றது. ஆகவே, இதனை நாம் சேவிப் பதால் இனியவாழ்வை யடையக் கூடும் என்பது திண்ணம்" என்று சந்து என்னும் பாகவதர் கூறினர். அவரைத் தொ டர்ந்துபோன அன்பர் அவ்விருத்தாந்தத்தைக்கேட்டு என்று மடையாத சந்தோஷ மடைந்தார்கள்.

10 சந்து என்னும் தன் தந்தை தன்ருயுடனும் மற்றுஞ் சிலருடனும் காசி க்ஷேத்திரத்தின் மகாத்மியத்தைப் பேசிக் கொண்டும் பகவானது குணவிசேஷங்களைக் கீர்த்தன ரூபமா கப் பாடிக்கொண்டும் போவதைப் புண்டரீகன் பார்த்தான்; உடனே தனக்குள் ஏதேதோ சிந்திக்கலுற்ருன்; 'ஆ! ஆ!! இந்தக் கிழப்பிணங்களுக்கும் ஈசுவரபக்தியா? ஆடுகிருர்கள்; பாடுகிருர்கள். நல்ல வாலிபமும் தேகதிடமுங் கொண்ட எனக்கில்லை போலும்!' என்ருன்; நல்லது, அந்த அழகை யும் இதோ காட்டுகிறேன்" என்று எழுந்தான்; தக்க உடை களால் தன்னையும் தனது காதலியையும் அழகு படுத்திக் கொண்டான். பிறகு பிரயாணத்துக்கு வேண்டியவைகளுடன் தன்மனைவியையு மழைத்துக் கொண்டு காசிக்குப் பிரயாண மானன்.

இப்படிப் புறப்பட்ட புண்டரீகன் வழியில் நடக்கமாட் டாமல் வருந்திய மனைவியைத் தோளில் தூக்கி வைத்துக்

கொண்டு நடந்தான்; காசியை நெருங்கியதும் தங்கியிருக்கத் தகுதியான வசதியொன்றை அமைத்துக் கொண்டான். அந்த வசதி குக்குடரென்னு மொரு மகா யோகி வசித்து வந்த ஆச்ரமத்துக்குச் சமீபத்திலிருந்தது. அதனால் குக்குட யோகியர் நாள்தோறும் அநுஷ்டித்துவந்த ஆசாரத்தை அப் புண்டரீகன் பார்த்து வந்தான்.

---

## 2.

---

குக்குடரின் கொள்கை மெத்தவும் மேன்மை யுடையது; அவருக்குத் தாய் தந்தையரே தெய்வம்; அவர்களுக்குச் செய்யும் பணியே புண்ணிய க்ஷேத்திர தரிசனம், புனித தீர்த்தஸ்நானம், கடவுளின் வழிபாடு. இக்கொள்கையைக் கைக் கொண்ட அவர் ஒருபோதும் அதினின்றும் வழுவிநடவாதவர். இத்தன்மையரான அவருடைய ஆச்சிரமத்தில் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்னுந் தெய்வமாதர் மூவரும், தங்கள் பாபங்கள் நீங்கவேண்டி, பிரதிதினமும், வேற்றுருக்கொண்டு வந்து மிக்க பயபக்தியுடன்குக்குடரை வணங்கிப்போவார்கள். மெய்யடியரின் பெருமைவிளம்புதற்களவுபடுவுமா? "என் விஷயத்தி லுழைப்பவர்களின் வேலையனைத்தும் என்னுடைய தாதலின் நானே முன்னின்று அவ்வேலைகளை முடித்து வருவேன்" என்று கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்குமுன் உபதேசம் செய்யவில்லையா? அதுபோல் மேற்சொன்ன யோகியரைக் கனப்படுத்தக் கங்காதேவி முதலிய மூன்று கடவுள் மங்கையர் அவருடைய இருப்பிடம் சேர்ந்து, அந்த இடத்தைச்சுற்றி சுத்திசெய்து அவரையும் பணிந்து போவதை வழக்கமாகக் கொண்டனர்.





2. இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற புண்டரீகன் அவ் வாச்சிரமத்திற்குள் சென்று குக்குடரை நோக்கி "இன்னும் காசி க்ஷேத்திரம்எவ்வளவுதூரமிருக்கும்?" என்று கேட்டான். அதற்குக் குக்குடர் "நான் அறியேன்" என்று விடையளித்தார். இவ்வார்த்தையைச் செவியேற்ற புண்டரீகன்ஆச்சரிய மடைந்து "காசியை யறியாத நீர் எடுத்த பிறப்பும் ஒரு பிறப்பா? கள், காமம், கொலை, களவு, பொய் என்னும் பெரும் பாதகம் ஐந்தும் கங்கையில் மூழ்கப் பறந்துபோம் என்று எத்தனையோ பேர் நித்தம் நித்தம் அதை நாடிச் செல்கின்றனரே! பல தீட்டையும் ஒரு முழுக்கில் ஒழிக்க வல்ல இதன் வைபவத்தை நீவிர்கேட்டுமறியீர் போலும்!" என்று பரிகசித்தான்.

3. குக்குடர் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல், வந்த விருந்தினரை அன்புடன் வரவேற்றுத் தம்மிடம் இருந்து போகும்படிக் கேட்டுக் கொண்டார். இவர் விரும்பியவாறே புண்டரீகன் அவருடைய ஆச்சிரமத்தில் இருந்தனன். பாதியிரவில் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்பவர் மூவரும் ஊழியர் போல் வடிவம் பூண்டு, குக்குடரின் வீடுவந்து சேர்ந்ததைப் புண்டரீகன் பார்த்தான்; பேய்களோவென்று பயந்தான். ஆனல் புகுந்த மூன்று பேரும் அந்த மகா யோகியரின் வீட்டைச் சுத்தஞ் செய்தனர். சாணமிட்டு மெழுகினர். கோலமுமிட்டனர். பின்னும் பல பணிகளைச்செய்துவிட்டு ஊழிய ருருமாறித் தேஜசுள்ளவராய் விளங்கிப் போயினர். இவற்றைப் புண்டரீகன் கண்டான். தனக்குள் ஒன்றுந் தோன்றாதவனாய், அம்மூவரையுங் கிட்டி "இந்தச் சாமவேளையில் இங்குவந்த நீங்கள் யாவர்?" என்று வினவினான்.

4 இவ்வினாவிற்கு அவர்கள் அவரை ஏற இறங்க நோக்கி முகத்தைச் சுளித்துக் கொண்டு மௌனமானார்கள். புண்ட

ரீகன் மீண்டும் அவர்களை அதி விநயத்துடன் வேண்டினன்: அவர்களுள் கங்கை, புண்டரீகர் முன்வந்து "நீ மகா பாபி. உன் முகத்தில் விழிக்க எங்களுக்குப் பிரியமில்லை. சீக்கிரம் இவ்விடத்தை விட்டு அப்பால் விலகு" என்று சொன்னாள். அச்சங்கொண்ட புண்டரீகன் அந் நாயகியின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து "அம்மா! முன்வினைப் பயனால் யான் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபங்களை நீயே போக்கி யருளல்வேண்டும். ஏதோ சிறிது புண்ணிய மிருந்தபடியினாற்றான், கொடியபாவஞ்செய்த எனக்கும் உனது தரிசனமும், மற்றவர்களின் தரிசனமும் கிடைத்தது. இனி நான் புண்ணியவானானேன்; கிருபை செய்து என்னைக் கடாக்ஷிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று மன்றாடினான்.

5. காருண்யமுள்ள கங்காதேவி, புண்டரீகனைப் பார்த்து "அப்பா! நீஇப்பிறப்பில் பண்ணியபாபம் அதிகம். அதைமன்னிப்பதற்கு மார்க்கமே சாணும்" 'சிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரியோர் அப்பிழை பொறுத்தலுமரிதே' என்னும் விதியை நீயேசற்றுயோசித்திப்பார். நாங்களென்ன செய்வோம். முன்னைய ஜன்மாந்திரத்தில் நீதேடிக் கொண்ட புண்ணிய பலத்தால் இந்த மகாயோகியரான குக்குடரையும் எங்களையும் உன் ஊனக்கண்களால் காணும் பாக்கியத்தைப் பெற்றாய். நாங்களோ சுவர்க்கலோக வாசிகள்! என் பெயர் கங்கை; மற்றையிருவருள் ஒருத்தியமுனை. மற்றொருத்தி ஸரஸ்வதி. எங்களில் மூழ்குவோருடைய பாபராசிகளை நாங்கள் கைக்கொண்டு ஒளியிழந்து விடுகிறோம். அது நீங்கிப் பழைய ரூபத்தை அடையும் பொருட்டே நாங்கள் ஒவ்வொரு நாளும் குக்குட யோகீசுவரருக்குப் பணிவிடை புரிந்து வருகிறோம். உன்னுடன் அதிகமாகப் பேச எனக்கு மனமில்லை. இந்த க்ஷணமே செல்லக் கடவாய்" என்றனள்.

6. புண்டரீகன் மிக்க மரியாதையுடன் கங்காதேவியை வணங்கித்துதித்து "அம்மா, கருணாரூபியே! 'தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம், மருண்ட தன்மையை மாற்றுவர்' என்று பெரியோர் புகன்றிருக்கின்றனர். நானோ உன்னையும் உன் தோழியரையும் சேவிக்கும் பயனைப் பெற்றேன்; நீயும் என்னைமதித்து என்னுடன் பேசும் பாக்யம் பெற்றேன். இனி என்னை அவலப்படுத்துவது அழகல்ல எனக்கொரு ஸந்தேகமுமுண்டு. அதையும் தெரிவித்தருள வேண்டும். இந்தக்குக்குடர் நீங்கள் வணங்கத்தக்க அவ்வளவு புண்ணியம் யாது செய்தார்?" என்று கேட்டான்.

இப்படி வினவிய புண்டரீகரைப் பார்த்துக் கங்கை கூறுகிறாள் "அப்பா! இந்த யோகீசுவரரின் பெருமை என்னால் சொல்ல முடியாது. பிரத்தியட்சதெய்வமான பெற்றோரையே இவர், தாயாகவும் தந்தையாகவும், குருவாகவும், கடவுளாகவும், சகல பந்து மித்திரராகவுங் கருதி வழிபடுபவர்! 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது எப்போதும் இவர் நெஞ்சைவிட்டு நீங்கினதில்லை, 'தாய்க்கொலை சால்புடைத்தென்பார்' இவரைக் காணநேரிடின் அவர்களுக்கு இவர் "வருந்திப் பெற்ற தாய்மாரைப் பரிதபிக்க வைப்பவர் நல்ல பயனை யடையமாட்டார்கள்' என்று சொல்லுவார்; பின்னும் நம்மால் உண்டாகக்கூடிய இடர்களை யெல்லாம், அவர்களெப்போ லெவர்கள் சகித்துக்கொண்டு, நலஞ்செய்வதிலேயே நாட்டமாயிருப்பவர்?' என்று கேட்பார். அன்றியும் இப் பேருபகாரத்திற்கு மூன்று லோகமும் ஈடாகா. வயதுதளர்வினாலோ, வேறெந்த ஆயாசத்தாலோ அவர்கள் வாயினின்றும் வரும் வன்சொற்களை நாம் கரும்பிலிருந்து வரும் இனிய ரசமாகக் கொள்ளல் வேண்டும். 'இனியவரென் சொலினு மின்சொல்லே, இன்னார், கனியு மொழியுங்

கடுவே" எனவரு முதுமொழியை நாம் மறக்கலாகாது. நமக்கு அவர்களே ஊன்றுகோல். அவர்களைக் கைவிடுவோர் கண்ணிழைந்தவர்க் கொப்பாவார். நாம் நட்டுவளர்க்கும் மரம் நமக்கு மகிழ்வுண்டாகும்படி மலர், நிழல், கனி இவற்றைக் கொடாவிடின் அதனை வெட்டித் தீக்கிரையாக்குகிறோம். அதுபோல நம்மைப் பெற்று வளர்ப்பவர்க்கு நாம் யாதொரு நன்மையும் செய்யாவிடின், கடவுள் நம்மை நரகத்துக்கன்றோ ஆளாக்குவார். மனைவி, மைந்தர் ஆகிய இவர்களை நாம் துறந்தாலும் துறக்கலாம்; உடனேவேறு பெண்டு பிள்ளைகளைப் பெறலாம். அப்படித் தாயை வெறுத்தால், வேறு தாயை அடைய முடியுமா? ஆ! ஆ!! 'ஈன்றாளின், என்ன கடவுளுமில்' என்று ஆன்றோர் ஆய்ந்துரைத்ததை நாம் அவமதிக்கக் கூடாதே— என்று பற்பல திருஷ்டாந்த தார்ஷ்டாந்தங்களுடன் போதனை செய்வார்.

இத்தன்மையான நெறியைக் கொண்டுள்ளவர் இக்குக் குடராகையால், நாங்கள் அவரருளை எதிர்பார்த்திருக்கிறோம் என்றனள்.

8. இவ்வசனங்களைக் கேட்ட புண்டரீகன் பயந்தான்; தான் தாய் தந்தையர்க்குச்செய்த தவறுகளையெல்லாம் கங்கா தேவியிடம் சொல்லித் தன் பிழைகளைப் பொறுத்துத் தன்னைக் காக்கும்படி வேண்டிக் கொண்டான்.

9. கங்கை, அவற்றை யெல்லாம் பொறுமையாயிருந்து கேட்டுப் புண்டரீகனை நோக்கி, மனதிரங்கி, "அப்பனே இனி நீ நான் சொல்லுகிறபடி நடக்கவேண்டும். தாய் தந்தையரினும் மேம்பட்டவர் ஒருவருமிலர். அவர்களையே தெய்வமாகக்கொண்டு வழிபடுவாயானால் எல்லாவுயிரையும் காப்

பாற்றிவரும் பேரருளாளரான திருமால் உனது கோரிக்கை யனைத்தையுந் தலைக்கட்டி உன்னை நன்னிலைக்கு உரியவனாக் குவார்" என்று விளம்பி மூவரும் மறைந்தனர். பின்னர், புண் டரீகன் நல்லறிவு பெற்றுதேவமாதா மூவரும் கட்டளையிட்ட படி நடந்துவரத் துணிந்தான்.

---

## 3.

---

"தந்தை தாய்ப்பேண்" என்னுந் தருமத்தையே செய் யத்தகுந்த கருமமாகக் கொண்ட குக்குடயோகியைப் புண்ட ரீகன் பலமுறையும் பணிந்தேத்தி விடைபெற்றுக் கொண்டு தமது தாய்தந்தையரைத் தேடலுற்றான். "ஐயோ! நான் அருமைபெருமை தெரியாமல் அவர்களை அநீதமாகத் துன் பப்படுத்தி வந்தேனே! அதனால் நான் பெற்றது வீண்பழி யேயன்றி வேறென்ன? மாதாவின் நல்ல போதனையை மறுத்து நடந்த எனக்கு வாய்ச்சொல் எங்ஙனஞ் செல்லும்? செல்லாது, செல்லாது. 'தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' யல்லவோ? தாயை மாத்திரமா நோய் செய்து வந்தேன்; என் கல்விக்கு ஆதாரமாயிருந்த தந்தையுமன்றோ நோவுறப்பண்ணி னேன். அவருடைய இனிய சொல்லையும் உல்லங்கனப் படுத் தினேன். "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பதை அறவே மறந்தேன். குக்குடாலவர்கள் மகிமை வெளியா யிற்று. இனி எனக்கு அவர்களே தெய்வம்" என்று எண் ணிக்கொண்டேசென்று அவர்களைத்தேடிக்கண்டுபிடித்தான்; உடனே நிலமிசை வேரற்ற மரம்போல்விழுந்து தொழுதான்; தன்மனைவியையும் அவர்களுடைய பாதத்தில் விழுந்துபணி

யும்படிசெய்தான். செய்த பிழைகளைப் பொறுத்துக் காக்கும்படி மெத்தவும் வேண்டினன்; அழுது கெஞ்சினன்.

2. பெற்றமனம் பித்தாகையால் பிள்ளை அழுவதைக் கண்ட தாய்தந்தையர் கண்களிலிருந்தும் ஜலம் பிரவாகம் போலப் பெருகத் தொடங்கிற்று. உடனே அவர்கள் மகனைக் கண்குளிர நோக்கி, மெய்குளிரத்தழுவி, வாய்குளிர முத்தமிட்டு "எங்களருந்தவச் செல்வமே! தான் விளங்க, தன் குலம் விளங்க அறிவுள்ள மைந்தனொருவனை யளித்தருள வேண்டுமென்று கடவுளைநோக்கி நாங்கள் செய்துவந்த புண்ணியவிரத முதலான தவங்கள் பல. தவத்தாலன்றி யாதொரு பயனும் வேறெதனாலும் சித்தியாகாது. 'தவத்தவளவே யாகுமாம் தான் பெற்றசெல்வம்' என்பது நீதயல்லவா? தவமே ஒருவர்க்கு நல்வாழ்வையோ, கெட்ட வாழ்வையோ தரவல்லது. தவத்தாலுயர்வுபெற்று வாழ்ந்தவரநேகர்; அதனால் தாழ்வு பெற்றுக் கெட்டவரும் பலர். நாரத, வியாஸ, வஸிஷ்ட, பராசராதி மகரிஷிகள் தொடக்கமான கோடானுகோடிப்பேர் மேல் நிலையை யடைந்தது தவத்தினாலேயாம். இரண்ய, ராவண, துர்யோதனாதி அளவிறந்தபேர் கெட்டது தவத்தின் துர் உபயோகத்தினாலேதான். இராவணனது ஆட்சியில் ராக்ஷஸ ஸ்திரீகள், தேவதாஸ்திரீகளைப் பணியாளராகக் கொண்டது தவப்பேறுலென்று கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பர்,

"ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினால் இயைவ தின்மை
காட்டினார் விதியா ரஃது காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் கலன் பொருத பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர் ஆடுவார் அரக்கர் மாதர்"

எனக் கூறியுள்ளார். இப்படித் தவத்தின் சீர்மை பல திறப் பட்டிருக்கின்றது. சற்புத்திரப் பேறுபெற நாங்கள் மேற் கொண்ட தவத்தின் பயனாக நீ எங்களுக்குப் புத்திரனாய் நீ நன்மார்க்கத்திலொழுக வேண்டுமென்பதே எங்கள் மனோர தம். விட்டகுறை, தொட்டகுறை என்கிறார்களே அந்தச்சம் பந்தமாய்ச் சிலநாள் நீ துர்வழியில் நிற்க நேரிட்டது. இப் போது எங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டது. யாவரும் உனைக் கொண்டாடுகிறார்கள். "ஈன்றபொழுதிற் பெரிது வக்குந் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்கிற படி நாங்களுன்னைப் பெற்ற போதடைந்த களிப்பினும், உன் புகழைக் கேட்கும் இப்போதடையுங் களிப்பே பெரியது. நீ நீடூழி வாழ்வாயாக" என்று ஆசிமொழிந்தனர்.

3. பிறகு புண்டரீகன் பெற்றோரைக் காவடி கட்டித் தூக் கிக்கொண்டு காசியம்பதிக்குப் போய் அங்கே தீர்த்தமாடித் திருக்கோயில் கொண்டுள்ள கடவுளரைத் திரிகரண சுத்தி யாய்ப்பாடித்துதித்துத்தனது வீடுவந்து சேர்ந்தனன். இவன் ஈன்றோருடன் தோன்றியதைக் கண்ட ஊராரனைவரும் இவ னைப் பெரிதும் மெச்சினார்கள். புண்டரீகன் பெற்றோர் பணி யில் அணுவும் பிறழாதிருந்து பாகவானது கல்யாண குணங் களைப் பாடிக்கொண்டு சுகமாக வாழ்ந்து வாலானார்.

---

## 4.

---

இது இவ்வாறிருக்க, விருத்திராசுரன் என்பானொரு வனிருந்தான். இவன் துவஷ்டாவென்பவனுக்கு இளைய குமாரன். துவஷ்டா, தன் மூத்த மகனைக் கொன்ற இந்திரனை

ரய்க்கவேண்டி இவ்விளைய பிள்ளையைப் பெற்ருன். இளைய மகனுகிய விருத்திராசுரன், இந்திரனுடைய கட்டளைக் குட்பட்டவர்களை யெதிர்த்துப் பிடித்துச் சிறையிலிட்டான். இந்திரன் வெகுண்டு நெடுநாள் இவனுடன் போர்புரிந்தான்; வெற்றிபெறக் கூடாமையால் தக்க சமயத்தை எதிர்பார்த்தவனுய் தன்னிருப்பிடஞ் சென்ருன்.

1. விருத்திரன் இன்னும் பலம், ஆயுள் முதலிய சம்பத்தை யடைய வெண்ணித் தவஞ்செய்தான் அதுவே தனக்கு ஏற்ற சமயமென்றெண்ணி இந்திரன் விருத்திரனை, மறைந்து வந்து கொலை புரிந்தான். நேர்நின்று போர்புரிவதை விடுத்து, சூதுமார்க்கமாய் ஒருவருக்குக்கெடுதி விளைப்பது தகாத காரியமாகும். சகல நீதிகளையுணர்ந்த தேவர்கோன் நியாயவிரோதமான காரியத்திற் பிரவேசித்தபடியால், பாதகனுனன். அப்பாதகம் அவனைக் கல்லாய்விழச் செய்தது. சுரபதி கல்லாய் விழும்போது திருமாலைத் துதித்தான். அவன் துதிக்கிரங்கிய பகவான் அவனுக்குத் தரிசனந் தந்து "நீ பூமியில் தாய் தந்தையர்களைத் தெய்வமாக எண்ணிப் பூசித்துவரும் புண்டரீகன் வீட்டில் கல்லாயிரு; நாம் பிரஸன்னமாய் உனது சாபத்தைப் போக்கி ரக்ஷிப்போம்' என்று வரந்தந்தேகினர்.

2. அவ்வண்ணமாகவே சசிநாயகன்புண்டரீகனது இல்லத்தின்கண் கல்லா யிருந்தான். கிருஷ்ணமூர்த்தி, புண்டரீகன் காண, கல்லா யிருந்த இந்திரனுக்குத் தரிசனங் கொடுத்தார். அப்போது புண்டரீகன் தம் தாய் தந்தையர்க்குப் பணிவிடைசெய்து கொண்டிருந்தாகுதலால், சுவாமியைக் கண்டதும், "இதோ வந்தேன். அங்கிருக்கும் கல்லிலிரும். என் தாய் தந்தையர்கட்கு நான் செய்ய வேண்டிய கடமைகளைச்

செய்து விட்டு வருகிறேன். தாம் யார்?" என்று கேட்டான். சுவாமி, "நான், வஸுதேவருக்கும் தேவகிக்கும் மகனாய் அவதரித்த பகவான் என்றறிவாயாக! நான் இங்கு கல்லாய்க் கிடக்கும் இந்திரனுக்குக் காட்சி தர வந்தேன்" என்றான். புண்டரீகன், இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு பகவானென்பது தெரிந்தும் 'இதோ வந்தேன்;' என்று கூறித்தாய் தந்தையர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து விட்டுப் பகவானைப் பணிந்தார். பகவான், நீ உன் தாய் தந்தையர்க்குச் செய்த பணிவிடை கண்டு மகிழ்ந்தேன் அதுதான் பிள்ளையாய்ப் பிறந்த ஒருவன் செய்யவேண்டிய கடமைகளுள் முதன்மையானது. ஸந்தோஷம்! என்று கடாக்ஷித்து "உமக்கென்ன வரம் வேண்டும்"என்று கேட்டார். அவன் பெருமானை வணங்கி "சுவாமி! தேவரீர் எக்காலத்தும் 'விட்டலன், என்னுந் திருநாமத்தால் இவ்விடத்தில் எழுந்தருளி யிருத்தல் வேண்டும். பண்டரி என்னும் இத்தலத்தின் சார்பால் பாண்டுரங்கன் என்னும் பெயரைக் கொண்டு விளங்கவேண்டும். எல்லாத் தீர்த்தங்களும் இங்குவருமாறு செய்யவும்வேண்டும். இவையே நான் கோரும் வரம்" என்று பிரார்த்தித்தான். அவ்வாறே பகவான்இன்றும் யாவரும் சேவிக்க, பாண்டுரங்கனாய் வீற்றிருக்கலானார். சகல புண்ணிய தீர்த்தங்களும் அங்கு வரவும் செய்தருளினார்.

புண்டரீகன் முதலான யாவரும் பகவானைப் பலவாறு பாடிப் பணிந்து சுகஜீவியராய் நெடுநாள் வாழ்ந்திருந்து முடிவில் அழிவிலாதவாழ்வை யடைந்தனர்.

# நாமதேவ்

மண்டலம் புகழும் பண்டரிபுரத்தில் தாம்ஸேட்டி என்பவ ரொருவரிருந்தார். இவர், தையல் வேலை செய்பவருடைய மரபில் பிறந்தவர்; உத்தம குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர்; ஈசுவரபக்தியில் இயற்கையாகவே சிறந்தவர்; வாக்கு நாணயம் வாய்ந்தவர்; உலக இயல்பைப் பெரிதும் உணர்ந்தவர்; நிலையற்ற பொருள்களில் நிராசை கொண்டவர்; இன்மொழி புகலும் இனிய நாவு படைத்தவர்; கருணையே ஒருருவம் பெற்று வந்ததோ என்று காண்போரனைவரும் கனிந்து சொல்லத்தக்க தோற்றத்தை ஏற்றவர். இவர்க்கொரு மனைவியாரு முண்டு. அந்த அம்மாள் பெயர் குணுபாய். இக் குணுபாயும் கற்பிலக்கணம் வழாதவள். கணவன் கருத்தறிந்து நடக்கும் கடமையைக் கனவிலும் மறவாதவள். இவ்விருவரும் தெய்வபக்தியிற் சிறந்து பண்டரிபுரத்திலெழுந்தருளிய பகவானை வழிபட்டு வருவாராயினர்.

2. யாதொரு குறையுமின்றி மனமகிழ்வுடனே வாழ்ந்து வருமிவர்களுக்கு ஓராசை மட்டும் அதிகரித்திருந்தது. 'வயது தளர்ந்தவர்களாயும் இந்த ஆசை மாத்திரம் நம்மை விட்டகலவில்லையே' இதை எக்காலத்திலடையப் போகிறோம். ஓ! பண்டரிவாசா! பக்தர்கள் நேசா! இந்தக் கிழப்பருவத்திலும், எங்களுக்குள்ள புத்திரவாஞ்சை நீங்குமாறு கருணை புரியலாகாதா? சந்ததி விளங்கப் புத்திர பாக்கியத்தைக் கோருவது பூலோக வாசிகளுக்கு இன்றியமையாத விஷயமேயானாலும்

எங்களைப் போன்று அங்கந்தளர்ந்த முதியவர்களுக்கு அக் கோரிக்கை என்ன பயனைச் செய்யக் கூடும்?'' என்று பண்டரி நாதன் ஸந்நிதியில் பிரதி தினமும் அவர்கள் முறையிட்டு வந்தனர்.

3. தொண்டருக்குகந்து அவர்கள் கொண்ட கருத்தை முற்றுவிக்க வல்ல பண்டரிநாதர், தமது அன்பர்களான தாம்ஸேட்டிக்கும் அவன் மனையாளான குணபாயிக்கும் வியப்பையும் பேரானந்தத்தையும் உண்டுபண்ண மனங் கொண்டார். குணபாயின் சொப்பனத்தில் பகவான் பிரஸன்ன மாய் "ஓ! புண்யவதியே! நீ நாளைய தினம் பொழுது புலர்ந்த வுடன் ஒரு புத்திரனைப் பெறுவாய்'' என்று சொல்லி மறைந் தருளினர். திடுக்கிட்டு விழித்துக் கொண்ட குணபாய், தான் கண்ட அதிசயமான கனவை நினைத்து நினைத்து ஒன்றுந் தோன்றுதவளாய்ப் பிரமிக்கலானுள்; உடனே தனது கண வனை எழுப்பிச் சொப்பனத்தில் பெருமான் தனக்கருளிய திருவாக்கை வெளியிட்டாள். அம்மொழியைக் கேட்ட தாம்ஸேட்டி "பெண்ணே! நீ மெத்தவும் பைத்தியம் பிடித்தவள். நீ கொண்ட கவலையே உன் சித்தத்தைப் பேதித் திருக்கலாம். அதுவே கனவிலும் தோன்றி யிருக் கலாம். இனி நீ இவ்வாசையை அடியோடொழித்து விடு; கொம்புத்தேனுக் காசைப்பட்ட முடவனைப்போல், தள்ளாத கிழவியாய்விட்ட நீயும் மகவாசையை மேற்கொண்டாய். இதைப் பிறரறிந்தால் நம்மை மிகவும் ஏளனஞ் செய்வார்கள். இதுவே விஷயமாய் ஒருவரிடமும் ஒன்றும் பேசாதே. நமக் கினிமேலிருப்பதெல்லாம், பகவான் மீது வைத்த ஆசையை விர்த்திசெய்து வர வேண்டுவதேயாதலால், அதை மறந்து வேறு விஷயத்தில் கவனஞ் செலுத்துவது அழகல்ல'' என்று சொல்லி, அவள் கொண்ட மனேபிராந்தியை நீக்கினன்.

4. பெருங்கருணு நிதியான பக்தவத்ஸலன், நிரதி சயானந்தப் பதவியாகிய பரமபதத்திலுள்ள உத்தவ ரென்னும் உத்தமநித்திய சூரியொருவரை அழைத்து "அப்பா; உத்தவா! உன்ஞலொரு காரியம் ஆகவேண் டியதாயிருக்கிறது. பூலோகத்திலுள்ள ஜனங்களுக்கு நித் தியாநித்திய விஷயங்களை நன்ருகவிளக்கி அவர்களைக் கிருதார்த்தராக்க வேண்டும். அவர்களுக்கு என் குணதி சயங்களனைத்தையும் எடுத்துப் பலவாறு போதித்து அவர் களைப் பாசபந்தங்களினின்றும் திருத்தியாள நீயே சென்று தாம்ஸேட்டி என்பாஞெருவனுக்கு மகவாயிருந்து உலகத் தவரை நல்வழிப்படுத்த வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

5. பகவானது ஆக்ஞையைத் தடுக்கக் கூடாத உத்தவர் "சுவாமி! நரகத்தினின்றும் தப்பிவந்த அடியேனை மீண்டும் நரகக்குழியில் தள்ளுவது தருமமா? உலக மாயையைவெல்ல வல்லவருமுண்டோ? சிறந்தஞானியையும் பிறந்துழலவைக் கும் திறமை ஜெகத்துக் குண்டல்லவா? அதிற் சிக்குண்டவர் கரையேறுவது பகீரதப் பிரயத்தன மாயிற்றே! தேவரீரறியா தவரோ?" என்று மன்ருடினூர். பகவான் அவரைக்கண்குளிர நோக்கி "அன்ப! நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் உன்னைக் கைவிட மாட்டேன். எப்போதும் உன்னுட னிருந்து உனக்காக வேண்டிய வனைத்தையுங் கவனித்து வரு வேன். உன்னைப்போன்ற ஞானவான்கள் எங்கிருந்தாலென்ன? பிள்ளைப் பூச்சி சேற்றிலிருந்தும் சேற்றின் சம்பந்தஞ் சிறிது மின்றி யிருக்க வில்லையா?" என்று பலநீதி வசனங்களால் அவரைத் தேற்றி யனுப்பினூர்.

6. பகவானுடைய கட்டளையை மேற்கொண்ட உத்தவர் பத்தரைமாற்றுத் தங்கம் போல் பார்ப்பவர் கண்களைப்

பரவசமாக்கவல்ல பேரழகு படைத்த ஒரு பாலகனாய், சிப்பியொன்றின் மீது தங்கி, சந்திரபாகா நதியில் மிதந்த வண்ணமிருந்து, தாம்ஸேட்டி நீராடவருவதை எதிர்பார்த்திருந்தார்.

7. மறுநாள் வழக்கப்படி தாம் ஸேட்டி அந்நதிக்கு நீராடப் போகையில் சிப்பியிற்றங்கி மிதந்துவரும் குழந்தை யானது, தாம்ஸேட்டியின் கண்ணுக்குப் புலனும்படித் தோன்றியது. அதைக்தகண்ட, தாம்ஸேட்டி சிறிது நேரம் திகைத்த வண்ணமிருந்து, சுற்று முற்றும் பார்த்து, ஒருவரும் அக் குழந்தையை நோக்காதது தெரிந்து, அடக்க முடியாத ஆசையுடன் அதை அணைத்தெடுத்துக் கொண்டு "பகவான் நமது பிள்ளைக் கலிதீரப் பேரருள் செய்தான். இனி இங்குத் தாமதிக்கலாகாது" என்று நினைத்துக் கொண்டு தனது வீட்டைநோக்கி வெகு விரையாய்ச்சென்றான்.

8. பக்தர்களுடன் விளையாடுவதே பகவானுக்குப் பேருவப்பாகையால், அதிவேகமாய்ச் செல்லும் தாம்ஸேட்டியின் முன் ஒரு விருத்த வேதியராய்ப் போய் "ஐயா! தாம் ஸேட்டியாரே, நில்லும், நில்லும். உமது கையில் என்ன சொல்லும், சொல்லும். நீர் உலகப்பற்றில் நிராசை கொண்டவரென்று காட்டி வந்ததெல்லாம் இன்று பகிரங்கமாயிற்றே!

"நீளை சோரக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்திருமித்
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி"

நடக்குந் தசையை யடைந்த நீர் யார் குழந்தையைக்களவாடி மெத்தக்காதலுடன் போகின்றீர்? கிழப்பிணமான உங்களுக்கு இன்னும் புத்திரவாஞ்சை ஒழியவில்லை போலும். நல்லது உங்கள் வஞ்சகத்தனத்தை இப்போது வெளியிட்டு உங்களை அவமதிப்புக் குள்ளாக்குகிறேன்" என்று அவரைக் கையுமெய்யுமாய்ப் பிடித்து வாதிடத் தொடங்கினர்.

"இவனாடா சனியன்; எங்கிருந்து வந்தான் நம்முடன் வீண்போராட; கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போக வா இவன் திடீரென்று முளைத்தான்" என்று சிந்தித்து, "ஐயா! விருத்த வேதியரே! அவசரமாகப் போகும் என்னுடன் அமர்புரிய இதுவல்ல சமயம். குழந்தை மிகவும் பசியால் வாடிப்போகின்றது. துரிதமாய் நான் வீட்டுக்குப் போகவேண்டும். நீர் உமது வழியே போகலாம்" என்றார்.

விருத்த வேதியன்:—ஓய் தாம் ஸேட்டியாரே! நம்மை நீரறியீரோ?

தாம் ஸேட்டியார்:—அறியேன், அறியேன்.

வி - வேதி:—ஏன் ஐயா, பச்சைப்பொய்யைப் பயமின்றிச் சொல்கிறீர்.

கா:—சுவாமி! உமக்கு அனேக நமஸ்காரம்; இப்போது வீணே என்னுடன் பேசி என்னைத் தடைசெய்ய வேண்டாம். அவசரமாகப் போகிறேன்.

வி - வே:—நீர் அவசரமாகப் போவது இன்ன காரணத்தாலென்பது எனக்குத் தெரியவரும். நெடுநாள் உம்மை அறிந்துள்ளவனாதலால், இப்போது நீர் செய்த களவு தகாதென்று உமக்கு இதவார்த்தைகள் சொல்லி, உம்மைக் களவுக் குற்றத்தினின்றும் விடுவிக்க வந்தேன். நீரோ. என்னைப் பார்த்ததே இல்லையென்று நிதானிக்காமலே நடக்கிறீர். குற்றமுள்ள நெஞ்சு குணத்தைக் கைப்பற்றுமா?

தாம்:—(தனக்குள்) "பேய்களுக்குள் பிரம்ம ராக்ஷஸப்பேய் பொல்லாதது என்கிறார்களே! அது மெய்தான்போலும்!

இந்தப் பிராமணப்பேய் நம்மை இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி வழிமறித்து ஆயாசத்தைத் தருகின்றதே'! என்று நினைத்து, வெளிப்படையாய் வேதியரை நோக்கி "சுவாமி, இன்னொரு சமயம் விஸ்தாரமாகப் பேசலாம். இன்று சிறிது மன்னிக்க வேண்டும்.

வி - வே:—"எட்டினால் குடுமி, எட்டாவிடிற்கால்" என்பது போல என்னை விடாக்கண்டன் என்று எண்ணி இவ் விதஞ் சொல்கிறீர், நல்லது நீர் என்னை இது வரையில் பார்த்ததே யில்லையா? நின்று சொல்லும்,

தாம் ஸே:—எனக்கு ஞாபகமில்லை.

வி - வே:—அடடா! இப்படியும் உமக்கு ஞாபகமறதி நேரிடலாமா? நாள் தவறாமல் எனக்குப் பிச்சையிட்டு வரும் நீர் இவ்வேளை ஏதோ பராமுகமாய்ப்போவது பரிகசித் தற்குரியதே. போகட்டும். உமது கையிலுள்ளது யாது?

தாம்ஸேட்டி:—எதுவாயிருந்தாலென்ன ? நீரேன் கேட்கிறீர்? உமது வேலையைப் பார்த்துக்கொண்டு வந்த வழியே போம்.

வி-வே:—என் வேலையைப் பார்த்துக்கொண்டு வந்த வழியே போகத்தான் இத்தருணம் இந்த வழி வந்தேன். கையி லிருப்பதென்ன ? சும்மா, சொல்லும்.

தாம்ஸேட்டி:—(தனக்குள்) "இதென்னடா பேரிழவாயிருக்கிறது: அஷ்டமச்சனியன் போல் வந்து விட்டானே இப்பாவி! பண்டரிநாதா! பங்கயப்பாதா! இதுவும் வீண்வாதா ? அல்லதுன் சூதா ? முன்செய்த தீதா ? " என்று சொல்லிக் கொண்டே ஓட்டமாயோடித்

தமது வீட்டை யணுகினர். அப்போதும் விருத்த வேதியனாக வந்த பகவான் அவரை விடாது தொடர்ந்து போய் "ஐயோ! இந்த தாம்ஸேட்டி என் அருந்த வப்பேறாகிய குழந்தையை அபகரித்துக் கொண்டு போகிறானே. கேள்விமுறை யில்லையா? நீதியற்ற வூரா இது? ஓ நகரவாசிகளே! நீங்களாவது விசாரித்து என் பொருளை என்னிடஞ் சேர்ப்பிக்கலாகாதா? இந்தக்கிழஸேட்டிக்கு ஏது குழந்தை? சாகிற காலம் நெருங்கியும் இவனுக்குச் சந்ததி இச்சை தணியவில்லையே! தணியாவிடின் அயலாருடைய அருமந்தக் குழந்தையைக் களவாடலாமா?" என்று கூச்சலிட்டு ஆர்ப்பரித்தார். உடனே ஜனங்கள் கும்பு கூடினார்கள். அப்போது பகவானாகிய விருத்த வேதியன் குழந்தையைத் தாம்ஸேட்டியின் கையிலிருந்து வெடுக்கெனப் பிடிங்கிக்கொண்டு ஓடலானார். தாம்ஸேட்டி அவரைப் பின் பற்றிச்சென்று பண்டரிநாதன் ஸந்நிதியருகில் மடக்கிக் கொண்டு "ஐயா வேதியரே! ஏழையாகிய என்னுடன் வாதேன்புரிகிறீர். இக்குழந்தை எனக்கு நதியிற் கிடைத்தது. பகவான் கிருபை செய்த பாக்கியத்தை நீரேன் வாதாடி யபகரிக்க முயல்கின்றீர், உயர்ந்த வருணத்தவராகிய உமக்கு இது நீதியா!" என்று பலவாறு கெஞ்சிப்பேசிக் குழந்தையைக் கொடுத்தருளுமாறு வேண்டிப் பகவான் கையிலிருந்த குழந்தையைத் தாவிப் பிடித்தார். உடனே பகவான் அம்மகவைக் கசக்கியதன் பூர்வஞானத்தை மாற்றித் தாம்ஸேட்டியின் கரத்திற் கொடுத்தருளினார்.

தாம்ஸேட்டி, குழந்தையை வாங்கிக்கொண்டு தன் இல்லஞ் சேர்ந்து குணபாயிடம் அதைக்கொடுத்து, தான்

நதிக்குப் போனது முதல் வீட்டுக்கு வந்தது வரையில் நடந்த யாவற்றையும் சவிஸ்தாரமாய்ச் சொன்னார். குழந்தையை அதியாவலோடு பெற்றுக் கொண்ட குணபாய் பகவத் கிருபையால் அதற்குப் பாலூட்டினாள்.

II

1. பிறகு தாம்ஸேட்டியும் குணபாயும் குழந்தையை மிகவும் ஜாக்கிரதையாய் வளர்த்து வந்து, பெரியோர்கள் வாயிலாய் அக்குழந்தைக்கு 'நாமதேவ்' என்று திருநாமஞ் சாற்றிக் காலாகாலங்களில் செய்து வரவேண்டிய சகல கருமங்களையும் முறைப்படி செய்து வந்தனர்.

2. தாம்ஸேட்டி பிரதிதினம் பண்டரிநாதனுக்குநைவேத்தியம் படைத்து வருவது வழக்கமாதலால் நாமதேவ் வயதடைந்தும் அவர் வசம் நைவேத்தியத்தைப்பண்டரிநாதனுக்குப்படைத்து வரத் திட்டஞ் செய்தார். அவ்வாறே குணபாயானவள் நைவேத்தியத்தை நாமதேவிடங் கொடுத்தனுப்பினார். நைவேத்தியத்தை எடுத்துக் கொண்டுபோன நாமதேவ் வழியில் சில பிள்ளைகள் பந்தாடிக் கொண்டிருந்த விநோதத்தைச் சிறிது நேரம் நின்று கொண்டு பார்த்திருந்தார். அப்போது பிள்ளைகளாடிய பந்தானது நாமதேவ் வைத்திருந்த நைவேத்தியத் தட்டில் வந்து விழுந்தது. அதைக் கண்ட நாமதேவ் "ஐயோ, நைவேத்தியம் தீட்டுப்பட்டு விட்டதே! இதற்கென்ன செய்வேன்" என்று வருந்தி அந்தப் பிள்ளைகளுடன் சண்டை யிட்டுக்கொண்டிருந்தார்:

3. பிறகு "நைவேத்தியத்தைப் பண்டரிநாதனுக்குப் படையாமல் இங்கு வீண்பொழுது போக்கிவிட்டேனே. சீக்கிரம்படைத்து விட்டு வாவென்று பெற்றோர் கட்டளையிட்டனரே. நிஷ்காரணமாக இங்கு நின்று காலதாமதஞ்செய்தது

மன்றி அசுத்தத்தையுந் தேடிக்கொண்டேனே" என்று நினைத்து நினைத்து, துக்கமுற்று, பண்டரிநாதன் ஸந்நிதியை நாடிச்சென்றார். சென்றதும் பண்டரிநாதனைப் பணிந்து அபிஷேகாதி கிருத்தியங்களைக் கிரமப்படி செய்து நைவேத்தியத்தை உண்ணும்படி பகவானைக் கனிவாய் வேண்டினார்.

4. நாமதேவ் இப்படி வேண்டியும் பண்டரிநாதன், சிலா ரூபமாக இருத்தலின், மௌனமாகவே இருந்தார். இதைக் கண்ணுற்ற அன்பரான நாமதேவ் பன்முறை நைவேத்தியத்தை அருந்தும்படி பகவானைப் பிரார்த்தித்தும் தமது எண்ணம் நிறைவேறாதிருத்தலைக் கண்டு பெருமாளை நோக்கி "எங்குந் தங்கி எல்லாவுயிர்களையும் இனிது காத்தருளும் ஓ! பண்டரிவாசா; பார்க்கவிநேசா! ஆதிமூலா! அகிலாநுகூலா! ஒருசிறுதுகளால் ஒப்பற்ற பெரும் பாறையொன்றைப் பெண்ணுருவாக்கிய அண்ணலே, நீ செய்யும் மோடியாகிய புண்ணால் அடியேன் மெத்தவும் நொந்தேன்; ஆதரவு வேறில்லையென்றே வந்தேன். எனது எண்ணத்தை முற்றுவித்து என்னைக் கருணை கூர்ந்தாளவேண்டும். என் தாய் தந்தையர், நானிந்த நைவேத்தியத்தோடு திரும்பி வரக்கண்டால் என்னை நையப்புடைப்பார்கள். என்ன சொன்னாலுங் கேட்கமாட்டார்கள். ஏ! ஆபத் சகாயா! அனாதரக்ஷகா! சபரி என்னுந் தவப்பெண்ணொருத்தியின் எச்சிலை நச்சியுண்ட எந்தாய்! நைவேத்தியம் தீட்டுப்பட்டதென்று கோபமோ? எல்லா ஜீவர்களுக்கும் நீ பொதுவானவனன்றோ? 'வேண்டுதல் வேண்டாமை" யில்லாதவனாகிய உனக்கு அன்பு ஒன்றுதானே பிரதானம். ஏழையான எனது மனம் இத்தன்மையான தென்று நீ யறியாயோ? ஏ! சர்வமும் வல்ல சாந்த மூர்த்தியே! வழியில் நேர்ந்த நேரத்தோடு உன்திருவாசலில் வந்தும் வெகு நேரமாகின்றதே! சிறுவனாகிய

172700

எனது பிழையைப் பொறுத்து என்னை எவரும் எள்ளனஞ் செய்யாதவாறு நைவேத்தியத்தை யுட்கொண்டருள்வாய்" என்று பின்னும் எவ்வளவோ இறைஞ்சிக்கேட்டும், பகவான் பழையபடி சிலாவடிவமாகவே பேசாதிருந்தார்.



5 "இனி நாம் என்னசெய்யலாம். இதுவோ முரட்டுத் தெய்வமாகக் காணப்படுகின்றது. கருணை ரூபி என்னும்

பெயர் இதற்கு எவர்கொடுத்தாரோ தெரியவில்லை. இரக்கமே இதனிடம் கிடையாது போலும்! நைவேத்தியத்துடன் வீடு சேரினே நமது பெற்றோர் நம்மை இலேசாக விடமாட்டார்கள். நமது விதி இவ்விதமாகவா முடிந்தது! இனி நாம் உயிர் வைத்திருப்பதினும் உலகத்தை விட்டொழிவதே உத்தமம்" என்று யோசித்துத் தன் சிரத்தை அவ்விக்கிரகத்தின் திருவடியில் மோதிமாய்வதற்கு முயன்றார். அப்போது பக்த பராதீனனாகிய எம்பெருமாள் சிலாவடிவினின்றும் பிரசன்னமாய், நாமதேவைப்பார்த்து "அப்பா! நாமதேவ்! அவசரப்படாதே. உன் மனோதிடத்தைச் சோதித்தறியவே நான் உன்னுடன் வார்த்தையாடாமல் மௌனஞ் சாதித்தேன். அதற்காக மனஸ்தாபங் கொள்ளாதிருப்பாயாக. நீயே எனக்குகந்த அன்பன். உன் அன்பே பாராட்டத் தகுந்தது. ஏதோ கொண்டுவந்த நைவேத்தியம்! உன் அழகான சிறு கையால் அதை எனக்கு ஊட்டக்கடவாய் மெத்தவும் பசியாயிருக்கிறது" என்று சொன்னார். இவ்வினிய மொழிகளால் ஸந்தோஷ சாகரத்திலாழ்ந்த நாமதேவ் நைவேத்தியத்தைப் பகவானுக்கு ஊட்ட, அவரும் பிரீதியுடன் உட்கொண்டு அதிற் கொஞ்சம் தமது கரத்தினால் நாமதேவுக்கு ஊட்டினார். உண்டானதும் பெருமாள் நாமதேவுக்குத் தானணிந்திருந்த பீதாம்பரத்தைக் களைந்து உடுத்தினார்.

6. நாமதேவ் ஆனந்த முற்றுப் பரந்தாமனிடம் விடைபெற்றுக்கொண்டு தமது வீடுவந்து சேர்ந்து நைவேத்தியத் தட்டைத் தாயாரிடம் கொடுத்தார். குணபாய் தட்டில் ஒன்று மில்லாது கண்டு, ஐயங்கொண்டு "நாமதேவ் சிறுவனாதலால் நைவேத்தியத்தை அவனே புசித்திருப்பான்" என்றெண்ணி அதைப்பற்றி அவரை யொன்றுங் கேளாமல் தன் வேலையைக் கவனித்தாள். அன்று முதல் தினந்தோ

றும் நாமதேவ் பகவானுக்கு நைவேத்தியத்தைப் படைத்து வந்தார். பலநாளுந் தட்டானது வெறுந் தட்டாகவே திரும்புவதைக் கவனித்த குணபாய் "இதுகாறும் பண்டரி நாதனுக்கு நிவேதித்துவந்த பிரசாதத்தை நாமதேவ், சிறுவனுகையால், புசித்துப் போகட்டும் என்று ஒன்றுங் கேளாமலிருந்தோம். அவன் நாள்தோறும் அவ்விதமாகவே செய்து வருகிறன். அப்படிச்செய்வது நலமாகாது. பகவானுக்கு உலக முறையாய் நிவேதித்து வரும் பிரசாதம் வீடுவந்து சேர்ந்தாலன்றோ அந்தப் பகவத் பிரசாதத்தை யாவருக்கும் விநியோகிக்கலாம். ஒருவனே அவ்வளவும் அருந்தி விடுவது அழகல்லவே" என்று தனக்குள் தீரயோசித்து நாமதேவை யழைத்து "அப்பா! நாமா! பண்டரி நாதனுக்கு நிவேதிக்கும் பிரசாதத்தை நீ யொருவனே எடுத்துக்கொண்டு வந்தால் அந்த சேஷத்திற்கு ஆவல் கொண்டிருக்கும் பிறரென் செய்வார்கள். 'மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்று பெரியோர் கூறி யிருக்கின்றனரே, இனி நீ அவ்விதஞ் செய்யாதே. பண்டரி நாதனுக்கு நிவேதனமானதும் அதை அப்படியே இங்கு கொண்டு வரக்கடவாய்! நாங்கள் பார்த்து எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுப்போம். ஜாக்கிரதை" என்று திட்டஞ் செய்தாள்.

7. இப்பேச்சைக்கேட்ட நாமதேவ் ஆச்சரியமுற்றவராய் தன் தாயை நோக்கி "அம்மா! நான் கொண்டு போகும் நைவேத்தியமவ்வளவும், அந்தப் பாண்டுரங்கனே பெற்றுக்கொண்டு, அதை என் கரத்தால் தனக்கு உண்பிக்கச் செய்கிறார். அப்படி யுண்ணும்போது தம் கையாற் கொஞ்சமெடுத்து எனக்குத் தந்து என்னை யருந்தும்படி கட்டாயப்படுத்துகிறார். அவர் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு நானும் சிறிது புசிக்க நேரிடுகின்றது. இருவரும் புசிப்பதால்

கொஞ்சமும் மீதியாகிறதில்லை. ஆகையால் நான் வெறும் பாத்திரத்தையே வீட்டுக்குக் கொண்டு வரவேண்டியதா யிருக்கிறது" என்றுரைத்தார்.

8. நாமதேவ் சொன்ன நவீன மொழிகளைக் கேட்ட தாயார் கோபமும் சிரிப்பும் பொங்கியெழ, "இந்த இளம் பருவத்திலேயே இவன் பொருத்தமற்ற பொய் வசனம் புக லத்தொடங்கினுல், வயதேற ஏறப் பெரும் பொய்யனாய் நம க்கு அபகீர்த்தியைத்தேடி வைப்பதுடன் தானும் அவமதிப் புக்காளாய் அல்லலுற்றலைவானே! நமது வமிசத்தில் இது பரியந்தம் இப்படி அகாத பொய் பேசினேரொருவருமில்லை. பொய் எல்லாப் பாவங்களுக்கும் தாய் அல்லவா? பொய் பேசி னவாய்க்குப் போஜன மேது? ஹா! ஹா!! இவன் அநியாய மாய்க் கெட்டுப் போகிருனே. ஹரி ஹரி நாராயணு முகுந் தா! கேசவா? நாங்கள் நெடுநாள் புத்திர பாக்கியமின்றி யுன்னைக் கோரி வந்ததற்கு நீயும் எங்கள்மீது கிருபைகூர்ந்து அந்தச் செல்வத்தை யளித்தருளினுய்! உன் கருணு விசேஷ த்தால் கிடைக்கப்பெற்ற புத்திரனுக்கு நல்ல குணங்களையும் சிறந்த ஒழுக்கங்களையும் கடாக்ஷித்தருளினுல் அது உன் பெருமைக்குக் குறையாமா? லக்ஷ்மி நாயகா! எங்களுக்கு வாய்த்த அவன் பொய்யனென்று பேரெடுத்துவிடின் பிறகு அவனுல் எங்களுக்கு என்ன புகழுண்டு? இத்தன்மையான பிள்ளையை யடைவதைவிடப் பிள்ளையில்லாதிருப்பதே உத்த மம். ஏ! ஜெகதீசா! உன் திருக்கூத்தை ஏழைகளாகிய நாங் கள் அறியக்கூடுமா?" என்று வாய்விட்டுரைத்து, நாமதேவின் சகாத காரியத்தைத் தாம் ஸேட்டிக்கு அறிவித்தாள்.

9. தாம்ஸேட்டி, மனையாள் சொன்ன சங்கதி முற்றுந்தெ ரிந்துகொண்டு, அடங்காக்கோபத்திற்காளாய், "நாமதேவைக் கொன்று விடுவதே சரி; குலத்தைக் கெடுக்கவந்த கொடும்

பாவி இருந்தென்ன? இறந்தென்ன? எங்கே அவன்?" என்று கையிலொரு தடியெடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

10. தனது தந்தை தடிகொண்டு வருவதைப்பார்த்த நாமதேவ் "இந்தக் கிழவன் நம்மை உண்மை விசாரியாமலே நமது தாயின் மொழியை நம்பி அடிக்க வருகிறான். நாம் சொன்ன போதிலும் கேட்கமாட்டான். இவன் கையிலகப் படுவதைவிட நாம் வேறெங்கேனும் ஓடிப்போவதே நன்மை" என்று நினைத்து அங்குமிங்கும் ஓடத்தொடங்கினார். தாம் ஸேட்டி அவரை விடாது பின் தொடரலுற்றான். கடைசியாக நாமதேவ் எங்கும் ஒளிக்க இடங்கொணாது பண்டரி நாதன் ஸந்நிதிக்குட்போய் மூல விக்கிரகமான எம்பெருமானைத் தமது இரண்டு கரங்களாலும் இறுகத் தழுவிக்கொண்டு வாய் திறவாமலிருந்தார்.

11. தாம்ஸேட்டி அந்தச்சந்நிதிக்குட்புகுந்து நாமதேவைப் பிடித்துக்கொண்டு "அடா துஷ்டா! இப்போது என்ன சொல்லுகிறாய். பகவானுக்கென்று அனுப்பிவரும் நைவேத்தியத்தை நீ யுண்ணவில்லையா? பொய் சொல்லாதே! உண்மையை மொழிந்தால் தப்புவாய். இல்லாவிட்டால் நீ இறப்பது நிச்சயம்" என்று கோபாவேசத்துடன் கூறினான். அதற்கு நாமதேவ் "தந்தையே! ஸத்தியமாய் இந்தப்பண்டரிநாதனே நைவேத்தியத்தை யுட்கொண்டு எனக்குங் கொஞ்சங் கொடுத்தார். இந்த விஷயம் இப்பண்டரி நாதனுக்கும் எனக்குமேயன்றி வேறெவர்க்குந் தெரியவாராது. நான் நைவேத்தியம் படைக்குஞ் சமயத்தில் ஒருவருமிங்கிருப்பதில்லை" என்றார். அவ்வார்த்தையைச் செவியுற்ற தாம் ஸேட்டி "நல்லது, நீ செல்வது வாஸ்தவமாயின் இதோ கொண்டு வந்துள்ள நைவேத்தியத்தை ஏதோ நாங்கள் காணு

ம்படி பகவானுக்கு ஊட்டக்கடவாய்! பகவான் அதை அருந்துவாரானல் நாங்கள் உன் சொல்லை நம்புவோம்'' என்றான்''

12. நாமதேவ் "அப்படியே உண்பிக்கிறேன் பாருங்கள். என்று மொழிந்து பண்டரிவாசனைக் கண் குளிரப் பார்த்து "ஓ! தேவாதிதேவா, சர்வஜீவ தயாபரா, பரந்தாமா, கோவர்த்தனோத்தாரணா, அடியேன் கொண்டுவரும் நைவேத்தியத்தை நீ எப்படி இது பரியந்தம் உண்டு வந்தனையோ அப்படி இன்றும் உண்டு இங்குள்ள யாவரையும் குதுகலிக்கச் செய்தருள்வாய்'' என்று பிரார்த்தித்தார். ஆனல் பண்டரி நாதன் அவருடைய வெண்டுகோளுக்கிணங்கவில்லை. சிலா ரூபமாகவே சிறிதும் அசையாமல் இருந்தார். இதனை நோக்கிய அனைவரும் நாமதேவைப் பரிகசிக்கலானர். அதனல் நாணமுற்ற நாமதேவ் மனம் வருந்தினவராய் பகவானை எத்தனையோ விதத்தில் புகழ்ந்து "ஏ! வாசுதேவா, கிருஷ்ணா, கண்ணா, மணிவண்ணா, ஆபத்சகாயா நீ இந்த வேளையில் என்னைத் தொந்தரைக்குள்ளாக்காதே. என் வாக்கை மெய்ப்பித்து என்னைக் காத்தருளவேண்டும். பராமுகமாயிருந்தால் பலரும் என்னை ஏசுவார்கள்; பலபல விதமாகப் பேசுவார்கள். மெய்யர்க்கு மெய்யனன்றோ! உன்மகிமையை யறியத்தக்கவரெவர்? சிறியேனுகிய அடியேன் உனது கல்யாண குணங்களை அளவிட்டுச் சொல்ல வல்லவனே? காலதாமதஞ் செய்து என்னை வெறும்பொய்யனாக்க வேண்டாம்'' என்று அனந்தவிதமாகத் தொழுதிறைஞ்சினர். அப்போதும் பகவான் அசையவில்லை. அதனல் கோபங்கொண்ட நாமதேவ் பகவானை வாயில் வந்தபடி இகழலானர். மீண்டும் கைகுவித்து "ஏ! பண்டரி நாதா! அடியேன் அவசரப்பட்டு நிந்தித்துரைத்த வசனங்களைக் குற்றமாகக் கொள்ளாதே. குற்றத்தைக்

குணமாகக் கொள்ளுங்கோபாலா, கொஞ்சம் கிருபை செய்ய வேண்டும். இத்தருணம்" என்று கண்களில் நீர் ஆறாய்ப்பெருக நின்று வருத்தினர். என்ன வழுத்தியும் எம்பிரான் சிந்தை இளகவில்லை உடனே நாமதேவ் "எப்போது நமது வாக்குப்பழுதடைந்ததோ அப்போதே நமது பெருமை யழிந்து போயிற்று. மக்களிற் பதராய் விட்டேன். இனி நான் வாழ்வது தகாது" என்று சொல்லி அப்பண்டரி நாதன் திருவடியில் தனது தலையையுடைத்துக் கொண்டு இறக்கத் துணிந்தார். அக்காலையில் அன்பருக்கன்பனான ஆதியம் பகவான் பிரசன்னமாய் "பக்தியிற் சிறந்த பாக்கிய சாலியே! பொறு, பொறு, பொறு, இதோ உனது அபீஷ்டத்தை நிறைவேற்ற முற்பட்டு விட்டேன். முனிவு செய்யாதே. முகங் கடுத்துவையாதே. பலரும் பார்க்க உன் தாமரைக்கையால் நைவேத்தியத்தை எனக்கு ஊட்டக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே நாமதேவ் அன்னத்தை அனந்த சயனனுக்கு ஊட்ட அவரும் மகிழ்வுடன் புசித்தருளினர். அன்பனுக்கும் ஊட்டினர். இவ்வதிசயத்தைக் கண்ட தாம்ஸேட்டி, குணபாய், நகரவாசிகள் முதலிய எல்லோரும் பரமானந்த சாகரத்தில் மூழ்சிக் கரகோஷமிட்டுப் பையரவணைகொள் பரமேட்டியின் கல்யாண குணங்களைக் கீர்த்தனரூபமாகப் பாடினர்கள்; சிலர் ஆனந்த நிர்த்தனம் ஆடினர்கள்; சிலர் பூமழை பொழிந்தார்கள்; சிலர் இத்தெய்வமன்றோ மெய்த்தெய்வ மென்று கொண்டாடினர்கள்.

## III

இந்த அற்புதக் காட்சியின் பிறகு யாவரும் நாமதேவிடம் அன்பு பூண்டு அவரைத் தெய்வமாகவே பாவித்து அவர் சொற்படி நடக்கலுற்றனர். பெற்றோரும் அவ்வாறே நடந்துவரத் தொடங்கினர்கள்.

2. இங்ஙனமிருக்க, சிலகாலத்திற்குப் பின் நாமதேவுக்கு விவாக மஹோற்சவத்தை விமரிசையாக முடித்து வைக்கப் பண்டரிநாதன் காரணபூதனானான். நாமதேவின் தந்தையினுடைய சொப்பனத்தில் ஒருநாள் இரவு பகவான் ஓர் விருத்த பிராமணனாகத் தோன்றி "ஓய் தாம்ஸேட்டியாரே! உமது மைந்தனாம் நாமதேவுக்கு விவாகமாகத் தக்க பருவம்நெருங்கியும் நீங்கள் பராமுகமாயிருக்கிறீர்கள். அது தருமமாகுமா; உங்கள் மரபில் ராஜாபாய் என்னும் உத்தமப் பெண்ணொருத்தி யிருக்கிறாள். அவளே உங்கள் குமாரனுக்கு யோக்கியமான மனையாள். அக் கன்னிகையைப் போய்ப் பேசி முடிவுசெய்து கலியாண விழாவை முடியுங்கள். தாமதிக்க வேண்டாம். எந்தெந்தக் காலத்தில் எது எது செய்யக்கூடியதோ அது அது நிறைவேற்றினால் இலகம் களிப்புறும்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

3. தாம்ஸேட்டி இந்தக் கனவைத் தன் மனைவியிடஞ் சொல்லி "பெண்ணே! ராஜா பாய் என்பவள் யார்? நான் இதுகாறும் இப்பெயரைக் கேள்வியுற்றதே யில்லை. உனக்கேதாகிலும் இதுபற்றித் தெரியுமா?" என்று வினவினான் "ஆம், அறிவேன்; அவள் லக்ஷாதிபதியின் மகளாயிற்றே! நம்மைப்போன்ற பரம ஏழைகளுக்கு ஒத்து அவள் நடப்பாளா? நாம் தான் துணிந்து சென்று கேட்கத் தகுமா? அவளைக் கோருவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப்போலல்லவா முடியும்? அந்தப் பேச்சைப் பேசினாலும் கேட்பவர் நம்மைக்கேலி செய்யார்களா. நித்திய தரித்திராகிய நாம் எப்படி இதைக் குறித்து வார்த்தையாடுவது சீ! அது கெட்டது! நமக்குப் பகவான் கிருபைசெய்யுங்

காலம் நேரிட்டால் பார்த்துக்கொள்ளுவோம்" என்று சொல்லியதால் அந்தப்பிரகாரம் பகவத்பக்தியிலீடுபெட்டிருந்தார்கள்.

கலியாண விஷயமாய் யாதொரு கிளர்ச்சியும் மேற்கொள்ளாமல், தாம் ஸேட்டியும், குணபாயும் இருப்பதைக்கண்ட பகவான் ஒருநாள் இரவில் அவர்கள் வீட்டுத் தெருமுற்றத்தில் வந்து தங்கத்தால் செங்கற்களை ஒன்றின்பின் ஒன்றாக வீட்டு உள் வாசலில் விழும்படி எறிந்தார். கற்கள் வந்து விழுவதைக் கண்ணுற்ற தாம்ஸேட்டி "யாரடா அவன் கல்லெறிபவன்? நாங்கள் ஒருவருக்குந் தீங்குபுரிந்ததில்லையே. குற்றஞ் செய்தவர் வீடு தெரிந்து கொள்ளாமல் எங்கள் வீட்டின்மீது கல்லெறிய நேர்ந்ததோ? இனியெறிய வேண்டாம்" என்றான். அப்போது பகவான் "என்னைக் கேட்பவன் ஆரடா நீ? அதட்டிக் கேட்டபடியால் இன்னும் அநேக கற்களை எறிவேன்" என்று பின்னுஞ் சில எறிந்தார். தாம் ஸேட்டி பெருங்கோபங்கொண்டு கையிலோர் தடி யேந்திய வண்ணம் "நில், நில்—இதோ வந்து விட்டேன்" என்று தெருக்கதவைத் திறந்து கொண்டு வெளியேவரப் பகவான் மறைந்து விட்டார்.

பொழுது புலர்ந்ததும் வீதிக்குச் சாணமிட வந்த குணபாய், வாசலில் தங்கச் செங்கற்கள் குவிந்து கிடப்பதைப் பார்த்துக் கண்கள் கூசுவதால், கண்களை மூடி மூடித் திறந்து "வான நட்சத்திரங்களே நமது வாசலில் வந்து தவிழ்கின்றனவோ" என்று நினைத்து, "இதென்ன விந்தை? இதென்ன விந்தை" என்று கூச்சலிட்டாள். ஏதோ ஆபத்து நேரிட்டு விட்டது போலும்; அதற்காகத் தான் நமது இல்லக்கிழத்தி இப்படி இரைச்சலிடுகிறாள்" என வெண்ணி, தாம் ஸேட்டி ஓடி வந்தான். வந்தவன் திடீரெனக் கண்களை மூடிக்கொண்டு

"என்ன - கண்கள் கூசுகின்றனவே; நம் வாசலில் படிந்துள்ள சோதிப்பொருள்கள் யாவை?" என்று கேட்டான். இருவரும் சிறிது நேரம் பொறுத்துக் கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு திறந்து பார்த்தார்கள்; எல்லாம் தங்க நாணயங்களாக இருக்கக்கண்டு பெரு வியப்பும் பேராச்சரியமுமடைந்தார்கள். தாம் ஸேட்டி தன் காதலியை நோக்கி "அடி கண்ணே! நேற்றிரவு நமது வீட்டில் எவனோ கல்லெறிந்தானென்று கண்டபடி ஏசிக்கொண்டிருந்தேனே! அது உனக்கு ஞாபகமிருக்கிறதா? நான் ஆய்ந்தோய்ந்து பாராமலே வாய் மதங்கொண்டு, வந்தபடி வைது பெருத்த அபசாரத்துக் காளானேன். நமது வறுமை நோயை யொழித்து நம்மை நல்ல வாழ்வில் வைப்பதற்குப் பகவானே நம்மீது கருணை கூர்ந்து இவ்வாறு செய்யலானார். நம்பினவரை ஒருபோதும் பகவான் கைவிடமாட்டார். 'தாயினும் அன்பன் பூமகள் நண்பன்' என்பது ஸத்தியமன்றோ? பெற்றதாயினும் எத்தனையோ மடங்கு அதிகமாக அன்புவைத்து எல்லா உயிரையும் ஆதரித்துவரும் கருணாநிதியாகிய திருநாதனுக்கு நம்மால் செய்யத்தக்க கைம்மாறு முண்டோ?" என்று சொல்லி மகிழ்ந்து சென்றான்.

III

இஃதிவ்வாறாக, எல்லாம் வல்ல எம்பெருமான், ஒருநாள், ஜகன்மாதாவாகிய ருக்மிணி பிராட்டியை நோக்கி "பத்துடை அடியவர்க்கெளியவன்", "பக்தி வலையிற் படுவோன்" என்னும் பட்டப்பெயர்களைத் தெரியாமற் பெற்றுவிட்டேன். அப்பட்டங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைக்க வேண்டியதாய் விட்டது. அப்படி உழைத்தும்,

"மேம்பொருள் போக விட்டு மெய்ம்மையே மிகவு ணர்ந்து
ஆம்பரி சறிந்து கொண்டு ஐம்புல னகத்த டக்கிக்

காம்பறத் தலைசி ரைத்துன் கடைத்தலை யிருந்து வாழும்
சோம்பரை யுகத்தி போலுஞ் சூழ்புன லரங்கத் தானே.''

என்கிற முறைப்பாடு ஒருபக்கம் குவிந்து கொண்டே வருகிறது. இந்தச் சோம்பேறிகளை மாத்திரந்தானா நான் கைவிடுகிறதில்லை. ஏனையோர் எனது உதவியில்லாமலா உயிர் வாழ்கின்றனர்? அந்த ரகசியத்தை நிதானித்தறிந்துகொள்ளும் பாக்கியம் அவர்களால் அலக்ஷியஞ் செய்யப்பட்டு வருகின்றது. அதற்கு நானென்ன செய்வேன். திருப்தியில்லாத நெஞ்சம் படைத்தவர் செழிப்பது அருமை தானே; அதெல்லாமிருக்கட்டும். இப்போது ஒன்று நடந்தாக வேண்டியதாயிருக்கிறது. தாம் ஸேட்டியும் குணபாயும் நல்லவர்கள். எப்போதும் நம்மையே நம்பியிருக்கிறார்கள். நாம் செய்துவந்த எத்துணைச் சோதனைக்கும் எட்டுணையும் மனஞ்சலித்தார்களா? அவர்களுக்கு வேண்டிய திரவியம் கொடுத்தும் அதைக் கொண்டாகிலும் இப்போது ஆக வேண்டிய காரியத்தைத் திறமையுடன் செய்யப்போகிறார்களா? இல்லை, இல்லை. ஆகையால், நீ குணபாயைப்போல உருவெடுத்துக்கொள்; நான் தாம் ஸேட்டியைப்போல வடிவெடுத்துக்கொள்ளுகிறேன். நாமிருவரும் இவ்வேஷத்துடன், ராஜாபாயின் வீட்டுக்குப்போய் அவளுடைய பெற்றோரிடம் கலந்துபேசி ராஜாபாயை நமது நாமதேவுக்கு மணஞ்செய்து வைப்போம்'' என்று சொல்லி அவ்வண்ணமே உருமாறி ராஜாபாயின் தாய் தந்தையரைக்கண்டு கலியாணப் பேச்சை முடிவுபடுத்தினார்கள். ராஜாபாயின் பெற்றோரும் தமக்குள் "ஐயோ! நாம் சரிவர விசாரித்துணராமலே 'தாம்ஸேட்டி மெத்தவும் ஏழை; அவன் நம்முடன் சம்பந்தஞ் செய்வதற்குத் தகுந்தவனன்று' என்று தீர்மானித்திருந்தோமே. இப்போது பார்க்கப்போனால் அவனுடைய செல்வத்தின் முன் நமது செல்வம் சூரியன்முன் மின்மினியாக வல்லவோ இருக்

கக்காண்கிறோம்! வந்த தாம்ஸேட்டியும் குணபாயும் பூண்டிருந்த ஆபரணங்களை மூன்று உலகத்தையும் விலைமதிக்கக் கூடியவை என்றால் கையிருப்பில் அதிகமாகத் தான் இருக்கக்கூடும். நாம் முடிவு செய்தபடி. அவர்கள் வீட்டுக்கு நாளையதினம் போகவேண்டுமே! நாமும் அவர்களைப்போல் சிறப்பாகத்தானே செல்லவேண்டும்! அதற்கான ஏற்பாடுகளை உடனே சித்தஞ்செய்வோம்'' என்று பேசிக் கொண்டு அவ்வாறே சித்தமானார்கள்.

மறுநாள் அதிகாலையில் ராஜாபாயின் தாயும் தகப்பனும் தங்களைத் தக்கபடி அலங்கரித்துக் கொண்டு பிரயாணமாய், தாம்ஸேட்டியின் வீட்டுக்கு வந்தார்கள். பகவானுடைய கிருபையால் தாம்ஸேட்டி இப்போது லக்ஷாதி பிரபுவாகக் காணப்பட்டான். அவன் வீடு முழுவதும் தங்கமயமாக விளங்கியது. இந்தக் காட்சியைக் கண்ட சம்பந்திகள் "அடக்கமுடையார் அறிவிலரென்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா'' என்னும் முதுமொழியை நாம் சிந்தியாமலே தாம்ஸேட்டியைப் பரம ஏழையென்றும் அவன் சம்பந்தம் நமக்குதவாதென்றும் கருதினோம். மிக்க பொருளுடைய அறிவாளர்கள் இப்படித்தான் இருப்பார்கள். ஏனெனில் செல்வத்தின் தன்மையை அவர்கள் நன்றாயுணர்ந்தவர்களல்லவா?'' என்று பேசிக்கொண்டார்கள். இதற்குள் தாம்ஸேட்டியும் குணபாயும் தங்களுக்குப் போதமான செல்வத்தைத் தயாவிஷயமாகப் பகவான் கொடுத்தருளியதோடு, கோடீசுவரர்களான ராஜாபாயின் பெற்றோரையும் வலியத் தமது வீடுதேடிவரவுஞ் செய்தாரென்று பகவானது பேரருளை வியந்து கொண்டாடி, வந்த சம்பந்திகளை உரிய உபசாரத்துடன் வரவேற்றனர்.

பிறகு இருதாரத்தாரும் சம்மதிக்க, நாம தேவுக்கும் ராஜாபாய்க்கும் கலியாண மகோற்சவம் வெகு சிறப்பாக நிறைவேறியது. யாதொரு குறைபாடும் நேரிடாதபடி ஊரும் நாடும் ஒருங்கேதிரண்டு உகப்புறும்படிநடந்த விவாகக் காட்சியே காட்சியென்று மேலோ ரனைவரும் மெச்சிக் கொண்டார்கள். பலவகைத் தானங்கள் பரிசுகள், முதலியவைகளும் விசேஷமாகச் செய்யப்பட்டன.

இப்படி விவாக முடிந்த பின் நாமதேவ் தமது மனைவியுடன் கூடி இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வரலானர். இல்வாழ்க்கையிலிருந்தும் ஈசுவரபக்தி மட்டுங் குறையவில்லை. அது வளர்பிறைபோல் வளர்ந்து கொண்டே வந்தது. பகவான் நாமதேவின் குடும்பத்திற்கு, வறுமைப் பிணி நேர்ந்தபோதெல்லாம் அது தீரும்படிவேண்டிய திரவியத்தை யளித்து வந்தார். நாமதேவுக்குக் கடவுளருளால் ஓராண் மகவும் பிறந்தது! குழந்தை பிறந்து வளர்ந்து வரும் நாளில் ஜாதகன்மாதி காரியங்கள் சம்பிரமமாய் நிறைவேறப் பகவான் இன்றியமையாத உதவிகளனைத்தும் செய்து வந்தார்.

ஒரு சமயம் நாமதேவ் தரித்திர தசை யடைந்தும் அதைப் பொருட்படுத்தாமல் பகவத் குணநிசயங்களைக் கீர்த்தனஞ்செய்தவண்ணம் பண்டரிநாதன் ஸந்நிதானத்திலே இருந்து விட்டார்; குடும்பவிவகாரங்களைச் சிறிதும் கவனிக்கவில்லை. குடும்பமோ வறுமையால் மெலிவடைந்து செய்யும் வகையொன்று மறியாமல் பட்டினியாகவே நாள்களைக் கழிக்க வேண்டியதாயிற்று. அப்போது பகவான் ஒரு பணியாளனுகி வேண்டிய திரவியங்களை ஒரு மாட்டின்மீது ஏற்றிக்கொண்டு நாமதேவின் வீட்டை யடைக்தார்.

அடைந்ததும் வீட்டின் கதவு தாளிட்டிருந்ததால், தட்டினார். வீட்டில் நாமதேவ் இல்லை அவர் பண்டரிநாதன் ஸந்நிதியில் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தார். அவருடைய பெற்றோர் முதலானவர் மட்டும் வீட்டிலிருந்தனர். கதவு தட்டின சத்தம் வீட்டிலிருந்தவர் காதிற்படவே, அவர்கள் "ஓ! ஹோ! யாரோ பாகவதர் ஒருவர் போஜனார்த்தம் வந்ததாகக் காணப்படுகிறது. இவர்களுக்கு வேறு வேலை இல்லை போலும். எவராது ஏமாந்தவர்களகப்பட்டால் அவரை அடியோடு பாழ்படுத்துவது தான் இவர்கள் தொழில். நாம் மௌனமா யிருந்தால் தட்டுகிறவன் வந்தவழியே திரும்பிப்போய் விடுவான்" என்று நினைத்துக்கொண்டு பதிலுரையொன்றுங் கொடாமல் சும்மா இருந்தார்கள். பணியாளனாக வந்த பகவானே பின்னும் பலமாய்ப் பலதரங் கதவைத் தட்டினார். அதனால் கோபங்கொண்ட தாம்ஸேட்டி "யாரடா அவன் ஓயாமல் கதவு பிளவுபடும்படி தட்டுகிறவன். இங்கு நாமதேவ் இல்லை; எங்கேயோ போயிருக்கிறார். போன இடமுந் தெரியாது. நீ போய்வரலாம்" என்றான். அது கேட்ட பகவான் "ஐயா! ஒரு சங்கதி கொஞ்சம் கதவைத்திறங்கள்" என்று மீண்டும் தட்டினார். மானமுள்ளவர் தரித்திர முற்றால் விருந் தாளிகளைக் காணும்போது அவர்கள் மனம் "இதற்கென்னசெய்யப்போகிறோம்" என்று கவலைப்படுவது சகஜமான காரியந்தானே! இதுபற்றி ஆன்றோர்,

"தாங்கொணு வறுமை வந்தால் சபைதனிற் செல்ல நாணும், வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர்க் காண நாணும், பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணக்கஞ் செய்யும், ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்குத் தானே" என்று வரையறுத்திருக்கிறார்கள். ஆகையால் நாமதேவ் வீட்டார், பகவான் கதவைத் தட்டத்தட்ட மிகவும்

பயந்து பின் ஒருவாறு தேறி, முகங்கடுத்தவர் களாய்ப் பகவானைக் கண்டபடி ஏசி, அப்புறம் போகச் சொன்னார்கள்.

கதவைத்திறவாமலே இவர்கள் கடுகடுத் துரைத்த வன்சொற்களுக்குப் பகவான் கோபங் கொண்டவரைப் போல் நடித்து, தாம் ஸேட்டியை நோக்கி "ஏனையா, வீணாக ஆரவாரஞ் செய்கிறீர்? கதவைத் திறந்து, தட்டினவன் யாரென்றும், ஏன் தட்டினானென்றும், என்ன கொண்டு வந்திருக்கிறானென்றும் தெரிந்து கொள்ளாமலே, கண் மூடித்தனமாய் என்னைக் கண்டபடி ஏசத் தொடங்கினீர். இத்தன்மை வாய்ந்த உம்மைத்தானா மெத்தவும் உத்தமனென்று அந்த சௌகார் புகழ்ந்து இந்த மூட்டையோடு என்னை இங்கு அனுப்பினார் "பாத்திரமறிந்து பிச்சையிடு'! என்கிற பழமொழியை அவர் அறியாமற்போனாரே. மூர்க்கருக்கு உதவிபுரியலாமா? சரி சரி, இந்த மூட்டையை நானே அந்த சௌகாரிடம் திருப்பிவிடுகிறேன். இங்கு நடந்த விசேஷத்தையும் தெரிவிக்கிறேன்" என்று பெருத்த குரலாய் உரத்துப் பேசி நடக்கலானார். "யாரோ சௌகார் அனுப்பியதாகவும், கையில் ஏதோ மூட்டையிருப்பதாகவும் சொல்லுகிறானே, ஒருவேளை நமது நாமதேவுக்குத் தெரிந்த எவரோ நமது கஷ்டத்தை உத்தேசித்துப் பணம் அனுப்பியிருக்கிறதாகத் தெரியவருகிறது" என்று தாம்ஸேட்டி நினைத்து, உடனே கதவைத்திறந்து வெளியே வந்து, பணியாளனான பகவானைப்பார்த்து "ஐயா, நீர் யாரோ தெரியவில்லை; மூப்பினாலும், தரித்திரக் கொடுமையாலும் புத்தி கெட்டுப் பித்தம் பிடித்தலையும் நான் என்னவோ என்னையுமறியாமல் உம்மை ஏதோ சில இழி வார்த்தைகளால் கடிந்து விட்டேன். அது விஷயமாய் நீர் மனஸ்தாபப் படலாகாது" என்றுரைத்து

அவன் கரங்களிரண்டையும் பிடித்துக்கொண்டு கெஞ்சினர். அதற்குப் பகவான் "ஆம், ஆம், பணம் என்ருல் பிணமும் வாய்திறக்கு மல்லவா? உங்களுடைய வஞ்சக மெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டீர்களோ? இனி உங்கள் முகத்தில் விழிப்பேனு? கொஞ்சங்கூட உங்கள் யோக்கியதையைக் கண்டு கொள்ளாமல் அந்த சௌகார் என்னை உங்களிடம் அனுப்பினர். போதும். போதும், உங்களுபசாரம். நான்போய்வருகிறேன்" என்று விரைவாய் நடக்கலானர். தாமஸேட்டி ஓடிச்சென்று அவர்போவதைத்தடுத்து, பல்லைக்காட்டி, பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகும்படி வேண்டிக்கொண்டார். முடிவில் பகவான் தாம் கொண்டுவந்த தங்க நாணய மூட்டையைத் தாம்ஸேட்டியிடம் கொடுத்துத் தாகச்சாந்தி செய்து கொண்டு, விடைபெற்றுத் திரும்பி மறைந்தருளினர்.

ஒருகாலத்தில் நாமதேவ் தனது மகனுக்கு மயிர்வாங்கிக் காதுகுத்த நிச்சயித்திருக் கையில் பணமில்லாமல் தவிக்கும்போது பகவான் வேண்டிய திரவியங்களைக் கொடுத்தருளினர்.

திரவியம் கையிலிருக்கும் போதெல்லாம் நாமதேவ் ஸமாதாரனையை மறப்பதில்லை. அதனுல் எவ்வளவு பணம் வந்தாலும் வெகு சீக்கிரத்தில் செலவு செய்து விடுவார். அவ்வளவும் ஸத்பாத்திரத்திலேயே கழிந்துபோம்.

ஒரு சமயம், நாமதேவ் யாதொரு தொழிலுமின்றியிருந்தபோது தாயார், அவரைப்பார்த்து "அப்பா நீ இப்படி சும்மா இருந்தால் குடும்ப விவகாரங்கள் எப்படி நடைபெறும்? இவ்வூரில் எவர்க்கும் உபகரியாத லோபிதாதா என்பவனொருவனுண்டு. அவனிடஞ் சென்று சடன் கேட்டால்

கொடுப்பான். அதைவைத்துக் கொண்டு ஏதாவது வியாபாரஞ் செய்து கடனைத் தீர்த்து விட்டுக் காலக்ஷேபஞ் செய்து வரலாமே'' என்று பகர்ந்தாள். தாய்சொற்படியே நாமதேவ் அந்த லோபிதாதா விடம் கடன் பெற்றுக் கொண்டார். கடன் படுவது கூடாதாயினும், "தாய் சொற்றுரந்தால் வாசகமில்லை" யாதலால், அவ்விதஞ் செய்ய உடன்பட்டார். கடன் பெற்ற தொகையைக் கையில் வைத்துக்கொண்டு சில பாகவதோத்தமரைக் கண்டு அதிவிநயத்துடன் "சுவாமிகளே! அடியேனிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. அதைக் கொண்டு ஆத்மோற் ஜீவனத்திற்கேதுவான வியாபாரம் ஒன்று செய்ய விரும்புகிறேன். ஆனால் எத்தகைய வியாபாரம் செய்தால் ஆத்மோற் ஜீவனத்தை யடையலாமென்று திடமாய் உணர்வதற்குக் கூடவில்லை. தயைசெய்து தெரிவித்தருளவேண்டும்'' என்று பணிவாய் வினவினர். அவர்கள் பாகவத சமாராதனைக்கு மேலான வியாபாரம் உலகில் எதுவுமில்லை. அதுதான் நமது ஆத்மா கடைத்தேறும் வழியைக் காட்டிக் கொடுக்கும்'' என்றார்கள். அவர்கள் சொன்னபடியே நாமதேவ் கங்கையினருகே மடமொன்று கட்டி அன்னதானஞ் செய்து வந்தார். இதனை அனைவருமுணர்ந்து நாமதேவிடஞ் சென்றால் அன்னங்கிடைக்குமென்றுரைத்துப் போய்ப் புசித்து வரலாயினர். நாளடைவில் இந்த அன்னதான விசேஷமானது எங்கும் பரவிற்று. பண்டரிபுரத்து வேதியர் யாவரும் நாமதேவின் பால் செல்வோமானால் திருப்திகரமா யுண்டு, தக்ஷிணையும் பெற்று மீளலா மென்று பேசிக்கொண்டு செல்லலுற்றனர். நாமதேவுக்குக் கடன் கொடுத்த லோபிதாதா இதையறிந்து, தானுமங்கு ஏகினான். அவ்விடத்தில் பிரபலமாக அன்ன தானம் நடப்பதைக் கண்டு "ஐயோ நமது பணத்தைக் கொண்டு இந்த நாமதேவ் இக்கைங்கரியத்தைச் செய்யத் துணிந்தான்;

இனி இவன் நமது பணத்தைக் கொடுக்கப் போகிறதில்லை; எப்படிக் கொடுப்பான்; தான் காலக்ஷேபம் பண்ணுவதே அரியதாயிருக்கிறதே. நம்மிடம் கடன் வாங்கினதுபோல் இன்னும் எத்தனைபேரிடம் வாங்கி இவ்விதம் அன்னதானம் செய்து வருகிறானோ" என்று மனம் புழுங்கி யிருந்தான். இப்படி இருப்பவனை நாமதேவ் பார்த்து, அடிவணங்கி, சமாராதனைக்கு வந்தவர்களை நோக்கி" அடிகளே! இதோ இருக்கிற பிரபுவே சமாராதனை செய்தற் குரியவர். இனி இவரிடம் சென்று அன்ன முண்ணக் கடவீர்" என்று சொல்ல, அவ்வாறே அவர்கள் செல்வாராயினர்.

சமாராதனைக்குத் தன்னிடம் வேதியர் வருவதைக் கவனித்த சௌகார் "ஐயோ! நான் பெற்றோரின் சிராத்தமும், பொருள் செலவாய் விடுமென்று செய்தறியேன்; கோவில் போயறியேன்; குளமெடுத் தறியேன்; எத்தருமமும் செய்தறியேன். நான் நாமதேவுக்குக் கொடுத்த கடன் பணமும் சமாராதனைக்குத் துணையாயிற்று. அந்தப் பணத்தை நான் மீண்டும் அடையப்போகிற தில்லை. என் பணத்தை மோசம் செய்தது மன்றி, சமாராதனைக் குரியவன் நான் என்று என்னைச் சுட்டிக்காட்டி ஏளனமுஞ் செய்கிறான். இன்னும் என்ன செய்கிறானோ பார்ப்போம்" என்று சொல்லி ஒருபுறம் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

நாமதேவ், சமாராதனை முடிந்ததும் வேதியருக்குத்தாம் பூலம் தக்ஷிணை யளித்து விடையீந்தனர். பின்பு, சௌகார் நாமதேவைக்கடன் தீர்க்கும்படி நிர்ப்பந்தித்தான். நாமதேவுக்கு ஒன்றுந் தோன்றாமையால் பகவானை நோக்கிப்பார்த்தார். பகவான் ஒரு வற்சவுருவுடன் தோன்றி "எதிரிலிருக்கும் தீர்த்தத்தில் சௌகாரை மூழ்கச் செய்தால் கடன் தீரும்" என்று

கூறி மறைந்தனர். நாமதேவ் இச்செய்தியைச் சௌகாருக் குரைக்க, அவன் முதலில் சந்தேகப்பட்டு முடிவில் மூழ்கத் துணிவு பூண்டனன். தீர்த்தத்தில் மூழ்கிய சௌகார் அந்த நிமிஷமே பாதாளலோகஞ் சேர்ந்தனன். அவ்விடத்தில் துருக்கர் உருக்கொண்டு இருக்கும் சாதுக்களுடன் பெருமாள் ஒரு துருக்க ராஜனைப்போல், கண்களைக் கவரவல்ல சோதிமயமான ரத்தின சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டு இதென்னவென்று அதிசயங் கொண்டனன்.

அங்கிருந்தவர் சௌகாரை நோக்கி "ஐயா! உம்மைப் பகவான் அன்னம் புசிக்க அழைக்கின்றார்; மாமிச பதார்த்தங்கள் விசேஷமாக இருக்கின்றன" என்றார்கள். சௌகார் "இதுவும் வேடிக்கைதான். அங்கே பணத்தை இழந்தோம் இங்கே துருக்க அன்னம் புசித்து ஜாதியாசாரமும் இழக்கலாகின்றது" என்று தன்மனதிற்குள் யோசித்து, "நம்மை இத்தருணம் காப்பாற்றத் தகுந்தவன் நாமதேவே" என்று அவரைச் சரண் புகுந்தனன்.

நாமதேவ் சௌகாரைப் பார்த்து "இதோசிங்காசனத்திலிருப்பவர் பெருமாள்; துளபமாலை யணிந்தவர்; மற்றவர் சாதுக்கள். அவர்களுடன் நீர் உண்ணலாம்" என்றார். சௌகார், நாமதேவை நோக்கி "நீர் மாயாஜாலம்புரிவதற்கு வல்லவர், நானே உம்மிடம் கொடுத்த கடன் பணத்திற்கு யாதொரு தஸ்தாவேஜும் பெறவில்லை, நீர் கிருபைசெய்து என்னை என்னிருப்பிடம் போக அநுமதி தருவீரேல் இனி எக்காலத்தும் கடன் கேளேன்" என்றான். நாமதேவ் "ஆகட்டும், நீர் இச்சாதுக்களுடன் உண்டுவாரும்" என்றான். எனக்கு அரிசி பருப்பு முதலிய சாமான்களை வாங்கித்தரின் நானே சமைத்துண்பேன்" என்று சௌகார் சொன்னார். அங்ஙனமே

ஆகுகவென்று அவனிஷ்டப்படி செய்து அவனைக் கங்கையில் மூழ்கவைத்தனர். மூழ்கியவன் பண்டரி புரத்தில் சந்திரபாகா நதியினின்றும் ஓரெரி முட்டையுடன் வெளிவந்து ஆச்சரியப்பட்டு வீடு சேர்ந்தான். அவன் மனையாள் எங்கே கடன் பணத்தைப்பெற்று வந்தீராவென, அவன் "பெண்ணே! நாமதேவ் மனிதரல்ல. உண்மையில் தெய்வமே ஆவார். என்று நடந்தவரலாறு முற்றும் தெரிவித்தான். அவன் கையிலிருந்த எரிமுட்டையை அவனுடைய மனைவி தன்கையில் வாங்கிப் பார்த்தபோது அது சுத்தப் பொன்னாயிருக்கக்கண்டு பரமானந்தமடைந்தாள்.

இவ்வண்ணம் பல அடியார்களோடு கூடி அநந்தமான திருவிளையாடல்களைச் செய்துகொண்டு நாமதேவ் உலகை வாழ்வித்தருளினார்.

சுபம்—சுபம்—சுபம்.

---

# கோரா குயவர்.

---

கோரா குயவர் என்னும் இவர் பண்டரிபுரத்திற்கு அருகே தரடோகி என்னும் ஓர் ஊரில் வசித்து வந்தார். இவர் ஜாதியில் சட்டி பானைகள் செய்யும் குயவர். ஜாதியிலே குயவராயிருந்தாலும் இவர் தமது ஒழுக்கந்தவறாத தூயவராயும் எல்லோரும் புகழத்தக்க ஒரு நல்லவராயுமிருந்தார். இவர்க்கு நல்ல படிப்பிருந்ததாகத் தெரியவில்லை. படிப்பில்லாமலிருந்தும் இவர் தம் தூய நடவடிக்கைகளிலே சிறந்திருந்தமையினால் இவர்க்கு நன்மை தீமையுணரும் நல்லறிவு

மேம்பட்டிருந்தது. எங்கும் நிறைந்த ஈசனையன்றி இவ்வுல கத்தில் வேறு இனியவரில்லையென்னும் பேரறிவும் சித்தித் தது. அதனால் இவர் எப்பொழுதும் பாண்டுரங்கனாகிய பகவானிடமே அன்பு செலுத்திவந்தார். அவருடைய திரு நாம சங்கீர்த்தனமே சதா காலமும் செய்துவந்தார்; ஆயி னும் சட்டிபானை செய்யும் தம் தொழிலிலேயே ஜீவனம் செய்து வந்தார். ஆனால் சில சமயம் இவர் தம்மை மறந்து பகவத்யானத்திலிருந்து விடுவார்; தாம் நினைத்தபோது பேசுவார். இன்றேல் இரண்டு மூன்றுநாள் வரையில் ஒருவரோடும் பேசாமலிருந்து விடுவார்.

2 இப்படியிருக்கும் இவர் மனைவியும் நல்ல உத்தமி. கணவனுக்கடங்கி நடக்கு இயல்புடைய பதிவிரதை! இவர்க ளுக்கு ஒருகுழந்தையிருந்தது. அந்தக் குழந்தையை வீட்டு முற்றத்திலே விட்டு விட்டு அவர் மனைவி ஒருநாள் வழக்கம் போல் ஜலந்திரட்டச்சென்றிருந்தாள். இப்பொழுது கோரா குயவர் பானைசெய்யக் கொண்டுவந்து கொட்டியிருந்த மண்ணை மிதித்துக்கொண்டிருந்தார். மிதிக்கும் அப்பொழுதும் அவர் தம்வழக்கப்படி பாண்டுரங்க ஸ்மரணை செய்துகொண்டேயிருந் தார். அதனால் அவர் வேறு பிரஞ்ஞையில்லாமல் இருந்தார். அவர் தம் விழி திறந்து விழித்துக்கொண்டிருந்தும் இப் பொழுது பார்வை யில்லாதவர்போ லிருந்தார். ஆனால் மண்ணை இரண்டு காலாலும் மிதித்துத் துவைப்பதில் தவற வில்லை.

3. இப்படி யிருக்கையில் அங்குச் சற்று தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை தவழ்ந்து கொண்டே வந்து அவர் காலைக் கிட்டியது. கோரா குயவர்க்குத் தம் குழந்தை தம் காலண்டை வந்திருப்பது தெரியவில்லை. அவர்

அப்படி மெய்ம்மறந்து த்யானஞ்செய்து கொண்டிருந்தமை யால் குழந்தையையுஞ் சேர்த்து மிதித்து விட்டார். குழந்தை வீறிட்டழுதது. அது அவர் செவியிற்படவில்லை. காலில் குழந்தை மிதிபடும் உணர்ச்சியும் தெரியவில்லை. என்ன செய்வது! மனம் அவருக்குப் பரமாநந்தமயமான பகவத் தியானத்திலல்லவா இருக்கிறது. மனம் சென்ற வழி மற்றப்புலனும் அடங்கி யிருந்தமையின் அவருக்கு காதும் கேட்கவில்லை கண்ணும் தெரியவில்லை. உணர்ச்சியு மற்றது. இப்பொழுது அவர் ஒரு சூத்திரப் பொம்மைபோ லிருந்து மிதிக்கின்றார். குழந்தை சற்றுநேரத்தில் மண்ணோடு மண்ணாய்க் கலந்து விட்டது. ஆனால் மண்ணில் மாம்சமும் ரத்தமும் கலந்திருப்பது நன்றாய்த் தெரிந்தது.

4. இங்கிப்படி குழந்தை மண்ணோடு கலந்த கொஞ்சநேரத்திற்கெல்லாம் கோராகுயவர் மனைவிவந்து ஜலத்தை இறக்கி குழந்தையைப் பேரிட்டழைத்தாள். பல தரம் அழைத்தாள். விட்டுக் குழந்தை வரவில்லை. என்ன செய்வாள் பாவம்! அங்கும் இங்கும் போய்த்தேடினாள். எங்கும் காணோம். ஐயோ தன் உயிரைஅதன்பேரில் வைத்து வளர்த்து வந்தாளல்லவா, குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டே கோரா குயவரிடம் வந்து "நாதா குழந்தை இங்கே விளையாடிக்கொண்டிருந்ததே அது எங்கே, காணோமே! இப்பொழுது நான் இங்கே விட்டு ஜலந்திரட்டப்போனேன்; அதற்குள் குழந்தையைக் காணோமே! என்ன மாயமிது! ஐயோ மனந்துடிக்கின்றதே!" என்றாள். கோரா குயவர் செவிடர்போல் தம் வேலையைச் செய்து கொண்டிருந்தார். அவர் மனைவி, த்யான பராராய் இருக்கிறார் என்பது தெரிந்தும் இன்னொரு முறை பலமாய், "ஐயோ குழந்தையைக்காணோமே!" என்று கத்தினாள். கத்தியும் அவர் வாய்திறக்கவில்லை. அப்பொ



ழுது அவர் மனைவி அங்கு மிங்கும் பார்த்தாள். குழந்தை மண்ணோடு மிதிபட்டு மண் மாம்ஸமும் ரத்தமுமாய் இருப் பதைப் பார்த்து "ஐயோ! ஐயோ! அருமைக் குழந்தையை மிதித்து விட்டீரே! குழந்தை மண்ணோடு மண்ணாய்ப்போய் விட்டதே! ஐயோ! நானென்ன செய்வேன்! நானென்னசெய் வேன்! பாவி நான் இங்கே விட்டு விட்டு ஜலத்திற்குப்போ னேன்! என்று கூறி மார்பிலடித்துக் கொண்டு அங்கேயே வெட்டுண்டமரம்போல் விழுந்து புரண்டு புரண்டு அழுது அரற்றி "ஐயோ! குழந்தையை மண்ணோடு சேர்த்து மிதித் தது கூடத்தெரியாமல் கூத்தாடுகின்றீரே! இப்படியுமுண்டா வைத்தியம் பிடித்தவன் கூட இந்தச் செய்கையைச் செய் யானே! வீடுபாழாய் விட்டதே! சுடுகாடாய் விட்டதே! இனி நான் உயிரோடிரேன்! இதே உயிரைவிடுகிறேன்! இதோ சாகின்றேன்! இனி இந்த வாழ்வு வேண்டேன்!" என்று உரத்துக் கத்தி அழுதாள்.

5. இப்பொழுது கோராகுயவர் தம் நினைவையடைந்து பார்த்துக்கோபங்கொண்டு "அடி பேதாய்! பெருமானை ஹிரு தயத்திலே கண்டு பேரின்பங்கொண்டு அவனையன்றிவேறொன் றையும் காணுமலிருந்த என்னைக் கெடுத்தாயே! சை" எனச் சொல்லி, அம்மாதை அடிக்கக் கையிலே சக்ரதண்டத்தை யெடுத்தார். அதைக்கண்டு பயந்து மனைவி "என்னைத்தீண் டாதேயும்! பாண்டுரங்கர்மேல் ஆணை" என்றார்.

6. இச்சொல்லைக்கேட்டதும் கோராகுயவர் அந்தச் சக் ரத்தைக் கீழே எறிந்துவிட்டு, "ஆ பாண்டுரங்கா! பக்த வத்ஸலா! பரம தயாபரா! முராரீ! பக்தவரதா!" என்று கூறித் தம்மை மறந்து சற்றுநேரம் நின்ற இடத்திலேயே நின்று பிறகு தன் மனைவியைப்பார்த்து ஒன்றும் பேசாமல்

பாண்டுரங்கனைத் துதித்துக்கொண்டே அவ்விடம் விட்டகன்றனர். அவர் மனைவியும் அப்பால் எழுந்து அந்த மண்ணையெல்லாம் வாரிவாரி வெளியே கொட்டிவிட்டு, "இவ்வளவு தான் நமக்குப் பிராப்தம்! என்ன செய்யலாம்!" என்றெண்ணி முழுகிவிட்டுத் தன் புருஷனுடைய காலை அலம்பப் போனாள். இதற்குள் ஊரெல்லாம் இச் செய்தி பரவிவிட்டபடியினால் எல்லோரும் அந்த வீட்டில் வந்து கூடிப் பலவாறாகக் கோரா குயவரை நிந்தித்தனர். அவர் எவருடைய நிந்தனையையும் இலக்ஷியம் பண்ணாமல் பஜனை செய்துகொண்டு ஞானாநந்தத் தாண்டவம் புரிந்தமையால், தம்முடைய பாதத்தை அலம்ப வந்த மனைவியைப் பார்த்து, "தோடாதே! தோடாதே! போ" என்று கூறிவிலகினார்.

7. இப்பொழுது அம்மாது பயந்து "ஐயோ! நான் அன்று பிள்ளையைப் பறி கொடுத்த தன் நிமித்தம் மனம் பதறி என்னை அறியாமல் சொன்ன இவ்வேழையினுடைய வார்த்தையைப் பொருட்டு படுத்தலாமா? ஏழையை மன்னிக்க வேண்டும். மன்னித்து அடியாளை அங்கீகரிக்க வேண்டும்." என்று கூறிக்கீழேவிழுந்து பணிந்தாள். கோர குயவர் "பெருமாள்மேல் வைத்த ஆணையை நானெப்படி மறப்பது? கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிப்பினும் நான் என்னுடைய நிச்சயத்தை விடமாட்டேன்" என்றார். மனைவி இதைக் கேட்டதும் பெருந்துக்கமடைந்து, பலமுறை பணிந்துவேண்டினள். அவர் அவள்பால் இரங்கவில்லை. ஊராரும் கூறினர். அப்பொழுதும் அவர் அதே நிலைமையிலிருந்தார். இனி இவரை மாற்ற முடியாதென்பது தெரிந்து எல்லோரும் தம் தம் வீட்டுக்குச் சென்றனர். அவர் மனைவியும் எழுந்து தன்விதியை நினைந்து கொண்டு உடனே புறப்பட்டுத் தன்னுடைய பெற்றோர்க

ளிருக்கும் ஊருக்குப்போய் அங்கு அவர்களிடம் நடந்த தைச் சொல்லி அழுதாள். அவர்கள் அவளைத் தேற்றினார் கள். பிறகு அம்மாது தன் தாய் தந்தையரைப் பார்த்து "நான் வாழ்க்கைப்பட்ட வம்சத்தை நிலை நிறுத்த விரும்பு கின்றேன். ஆதலால் தாங்கள் என் பார்த்தாவுக்கு என் தங் கையை விவாகம் செய்து கொடுக்கவேண்டும். அவர்க்கு நான் ஒருத்தி மனைவியாயிருக்கும்போது வேறெவரும் பெண் கொடுக்கச் சம்மதியாரென்று தீர்மானித்து இங்கு வந் தேன். என்னுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி யருளவேண்டுகின்றேன்" என்று வேண்டிக்கொண்டாள்.

இப்படிக் கேட்டுக்கொள்ளும் தம் புத்திரியின் மீது இரக்கங்கொண்டு அவர்கள் தமது இரண்டாவது புத்திரியை கோரா குயவர்க்குக் கொடுக்கச் சம்மதித்தார்கள்; உடனே கோராகுயவரிடம் போய் நடந்ததைச் சொல்லி அழைத்தார் கள்; அவர் விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்து இவர் கள் ஊருக்குவந்து சேர்ந்தார். பிறகு நல்லநாளில் நல்ல வேளையில் கிரமப்படி முகூர்த்தம் நடந்தது. அப்பால் கோராகுயவர் தம் ஊருக்குப் புறப்பட இருக்கையில், அவ ருடைய மாமனார், அவரைப்பார்த்து, "அப்பா, ஏதோ பிராப்த மிருந்து என் இரண்டாவது புத்திரியையும் உனக்கு விவாகஞ் செய்து கொடுக்க நேர்ந்தது. அது பற்றிச் சந் தோஷமே! நீ உன்னுடைய இரண்டு மனைவி யரையும் வஞ்சனையின்றி ஒரே ஸமானமாய் நடத்தி வரவேண்டும். இதுதான் நாங்கள் வேண்டுவது. இதற்கு மாறாக நடப்பா யாகில், பாண்டுரங்கர்மேல் ஆணையிருக்கிறது" என்றார்.

அறிஞராகிய கோரா குயவர் இதைக்கேட்டதும் சந் தோஷமடைந்து, பகவானுடைய கிருபை பூர்ணமா யிருந்

தால் பந்தங்கள் தமக்குத் தாமே போய் விடுகின்றன. இது பகவானுடைய பிரேரபணை" என்றெண்ணி, "அப்படியே நடக்கின்றேன்" என்று சொல்லி விடைகொண்டு இரண்டு மனைவியுடன் புறப்பட்டுத் தம்மூர் வந்து எப்போதும் போலிருந்து வந்தார்.

மூத்த மனைவியை இவர் தீண்டுவதில்லையல்லவா? அதுபோலவே இளையமனைவியையும் தீண்டுவதில்லை. "இப்படியிருப்பதேன்?" என்று மூத்தமனைவி ஒருநாள் சமயம் பார்த்துத்தன் நாதனைக் கேட்டாள். கோராகுயவர் "நான், உன் தங்கையை மணந்து வரும்போது வழி விட வந்த உன் தந்தை என்னைப்பார்த்து என்ன சொன்னார்? உன்னுடைய மூத்தமனைவியைப்போல் நீ இவளையும் நடத்தவேண்டும்; இல்லாவிட்டால் பாண்டுரங்கர் மேல் ஆணை என்று சொன்னாரல்லவா? அப்படியே நடக்கின்றேன். உன்னை நான் தீண்டுகின்றேனா? உன்னைத் தீண்டாத நான் அவளைத் தீண்டுதல் கூடுமோ?" என்று கேட்டார்.

இதைக்கேட்டதும் இருவரும் விசனித்தார்கள். பிறகு ஒருநாள் இளையவள், கோராகுயவர் படுத்திருக்கும்போது அவரிடம்போய் அவர் கைகளைத்தொட்டு "நாதா" என்றாள். உடனே கோராகுயவர், "ஹரி ஹரி பரந்தாமா! பாண்டுரங்கா" என்று சொல்லிக் கொண்டு "ஆண்டவனுக்காணையைக் கடக்க நேரிட்டதே!" என்று விசனமுற்று ஒருஸ்தம்பத்திலே ஒரு கத்தியைக் கட்டி, இந்தக் கைக்கல்லவா ஸ்திரீயின் ஸ்பரிஸம் ஏற்பட்டது. இதை இனி வைத்திருப்பது கூடாது" என்று தீர்மானித்து அந்தக்கையைக் காகரவென்று அறுத்துவிட்டு ஹரிநாம உச்சாரணம் பண்ணிக்கொண்டு தம்மை மறந்திருந்தார்.

17270

இதைக்கண்ட இரண்டு பத்தினிகளும் கோவென் றழுது மார்பிலடித்துக் கொண்டு "அந்தோ! இனி நாம் பிழைப்ப தெப்படி? இதென்ன காலம் வந்தது நமக்கு! இந்த விதிக்காளாகவா நாம் பெண்ணுகப் பிறந்தோம்!" என்றி கத்தினுர்கள். கோராகுயவர், "விசனிப்பது வீண்! இது ஆண்டவன் செயல்! அவனை த்யானம் செய்துகொண்டு கவலையற்றிருங்கள்" என்ருர். பின்னர் அவர்கள் கணவன் சொற்படி பகவானை த்யானித்து விசன மொழிந்து தங்க ளலுவலைக் கவனித்தார்கள்.

இப்படி யிருக்கையில் பண்டரீபுரத்தில் உற்சவம் வந்தது. அதற்கு ஸ்திரீகளிருவரும் தங்கள் நாதனை அழைத்துக்கொண்டு சென்ருர்கள். அங்கு ஆலயத்தின் மண்டபத்திற்குள் கோரா குயவர் பிரவேசித்ததும் சகல பக்தர்களுங் காண ஸ்ரீ ஹரி நடனம்புரிவதைக் கண்டார். எல்லோரும் ஹரிநாம ஸங்கீர்த்தனஞ்செய்தனர். அது கோரா குயவருக்கு அமுதமாரிபோல் செவியிலே விழுந்தது. எல்லோரும் இச்சமயம் கைகளைத் தலைக்குமேல் தூக்கிக்கொண்டு கொட்டத் தொடங்கினுர்கள். அதைக்கண்ட கோரா குயவர் தாம் அப்படித்தட்டி பஜனை செய்யக் கைகளில்லாமற் போனதை மனத்தி லெண்ணினுர். அவர் எண்ணிய அப்பொழுதே அவர் கைகள் வளர்ந்தன! இவ்வதிசயங்கண்டா ரனைவரும் பரம சந்தோஷமடைந்து இன்னும் அதிகமாக ஹரிநாமத்தைச் சொல்லி பஜனை செய்யலானுர்கள்.

இப்பொழுது கோரா குயவருடைய மூத்தபத்தினி தன் கைகளைக் கூப்பிக்கொண்டு வரங்களைக் கொடுக்கும் "வாசுதேவரே, என் நாதனுக்குக் கைகளைக் கொடுத்ததுபோல் எனது குமாரனையும் நீர் கொடுக்கவேண்டும்" என்று கூறிப்

பிரார்த்தித்தார். அப்பொழுது முன் மிதியுண்டு மண்ணோடு கலந்த பாலகன் பக்தர்கள் கூட்டத்திலிருந்து பாடிக்கொண்டு வந்தான். அதைக்கண்ட அன்னை ஆநந்தங்கொண்டு ஹரி நாம ஸ்மரணையோடு போய்க் குழந்தையை யெடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு உச்சிமோந்து கூப்பிட்டு லாலனை செய்தாள்.

இச்சமயம், "இன்றுதொடங்கி ஆணைதீர்ந்து விட்டது! தீர்ந்து விட்டது!! இனிச் சுகமாக இல்லறம் நடத்தக்கடவீர்!" என்னும் அசரீரி வாக்குண்டாயது! எல்லோரும் இதைக்கேட்டு ஆச்சர்யப்பட்டார்கள். கோரா குயவர் எல்லாம் ஈசுவரரின் நியமனம் என்பதுணர்ந்து உற்சவம் முடியும் வரையில் அங்கிருந்து பகவானைச் சேவித்துக்கொண்டு பிறகு மனைவிகளுடனும் மைந்தனுடனும் தம்மூர் வந்து சுகமாக வாழ்ந்து வந்தார்.

Printed at the Madras Diamond Press.